www.padippakam.com


# புதிய பார்வை

பார்வை - 7 — கார்த்திகை - 1991


# இராணுவத் தீர்வுக்காக "ஒப்பரேசன் வலம்புரி" அரசியல்தீர்வுக்கு தொண்டமான் யோசனைகள்!

## பலவீனப்பட்டுள்ளபுலிகளின் அடுத்தநிலை என்ன?

**தமிழீழத்துக்காகப் போராடுகிறோம் எனக்கூறித் தமது நலன்களைப் பாதுகாக்கவேண்டி அனாவசியமற்ற போர் ஒன்றை தொடங்கியபுலிகள் சிறிது சிறிதாக கிழக்கை இழந்து பின்பு வடக்கின் பெரும்பாகங்களையும் இழந்தனர். இன்று இலங்கையரசு தனது கடல், ஆகாய, தரைப்படைகளை குடாநாட்டை சுற்றிக் குவித்து ஒப்பரேசன் வலம்புரி என்னும் பெயரில் புலிகளை ஒரு வட்டத்துக்குள் குவித்துள்ளது. தொண்டமான் தனது அரசியல் யோசனைகளை முன்வைத்துள்ளார். இராணுவ அரசியல் ரீதியில் திணறிப் போயுள்ள புலிகள் மக்களை பாதுகாக்கவும் அரசியல் தீர்வுக்கு வரவும் என்ன செய்யப்போகிறார்கள் ?**

ராஜீவ்காந்தியின் படுகொலையைத் தொடர்ந்து தமிழகத்தின் கெடுபிடிகளாலும் தமிழக கரையோரம் கட்டுப் படுத்தப்பட்டதாலும் புலிகள் பலத்த நெருக்கடிகளுக்குள்ளாகினர். ஆயுதரீதியில் பலத்த தோல்விகளை சந்தித்து வந்தபுலிகள் தம்மைப் பாதுகாக்க மக்களின் நிவாரணப் பொருட்களையே தட்டிப்பறிக்கும் நிலைக்கு தள்ளப்பட்டனர்.

தங்களைக் காப்பாற்ற ஏதாவது வழி கிடையாதா என புலிகள் ஏங்க இருந்த வேளையில்பிரேமதாசாவுக்கெதிரான எதிர்கட்சிகளின் நம்பிக்கையில்லாப் பிரேரணை வந்தது. பிரேமதாசாவின் தேவையை பூர்த்திசெய்வதற்காக தம்மால் தடைசெய்யப்பட்ட ஈரோசை மீண்டும் தூசுதட்டி பாராளுமன்றம் அனுப்பி பிரேமதாசாவுக்கு வாக்களிக்க புலிகள் முன்வந்தனர். பிரேமதாசவின் தேவையை புலிகள் பூர்த்தி செய்ய முன்வந்தால் பிரேமதாசா யுத்தநிறுத்தம்,மருந்து அனுப்புதல் என நன்றிக்கடன் செய்ய முன்வந்தார்.

ஆனால் சபாநாயகரை கைக்குள் போட்டுக்கொண்டு நம்பிக்கையில்லாப் பிரேரணை, பிரச்சனையைத் தீர்த்துக்கொண்ட பிரேமதாசாவுக்கு புலிகளின் உதவி தேவையில்லாமல் போனது. பிரேமதாசாவின் பணிப் பின்பேரில் மீண்டும் ஒப்பரேசன் வலம்புரி என்னும்பெயரில் குடாநாடுமீதான இராணுவ தாக்குதல் ஆரம்பமாகியது.

### பூநகரி பாதை இராணுவம்கையில்

ஆனையிறவு இராணுவமுகாமை தாண்டி செல்லப் பயந்த மக்கள் பூநகரிப் பாதையைப் பாவித்துவந்தனர். இதனை சாதகமாகப் புலிகள்பாவித்து பெரும் பணம் சம்பாதித்து வந்தனர். மக்கள் நாட்கணக்கில் தவம்கிடந்து பூநகரிப் பாதையை கடக்கவேண்டியிருந்தது. மக்கள்படும் கஷ்டத்தை கண்ட ஒரு என்ஜினியர் தாம் பாலம்கட்டித்தருவதாக கேட்டபோது புலிகள் மறுத்துவிட்டனர் காரணம் வருமானத்தை இழக்கவிரும்பாததே. இங்ஙனம் புலிகள் பணம்பண்ணிய பாதையான பூநகரிப் பாதைப் பகுதியை இலங்கை இராணுவம் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்துள்ளது அத்துடன் ஆனையிறவு வழியை மக்கள் பாவனைக்கு இராணுவம் திறந்துவிட்டுள்ளது.

### தீவுப்பகுதிகள் இராணுவக்கட்டுப்பாட்டில்

ஏற்கனவே நயினாதீவை தமது பூரண கட்டுப்பாட்டில் இராணுவமும், கடற்படையும் வைத்திருந்தது. குடாநாட்டில் ஏனையபகுதிகளில் மக்கள் அத்தியாவசியப் பொருட்களுக்கு பெரும் கஷ்டப்பட்டனர். அல்லது புலிகளின் ஆதரவு வியாபாரிகளிடம் பெரும் பணம் கொடுத்து வாங்கவேண்டியிருந்தது. ஆனால் நயினாதீவு மக்களுக்கும் அனைத்து பொருட்களும் தாராளமாகவழங்கப் பட்டதோடு கொழும்பு விலைக்கே கொடுக்கப்பட்டது. இப்போது ஒப்பரேசன் வலம்புரி நடவடிக்கையாக அனலதீவு,புங்குடுதீவு,நெடுந்தீவு மற்றும் அனைத்து தீவுப்பகுதிகளையும் தமது கட்டுப்பாட்டில் கொண்டுவந்துள்ளதோடு இவர்களுக்கு அத்தியாவசியப் பொருட்களை தடையின்றிவழங்க இராணுவம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

புலிகளின் இராணுவப்பலவீனங்களை தமக்கு சாதகமாக்கி தீவுப்பகுதிகளை கைப்பற்றியுள்ள இராணுவம் புலிகளின் அரசியல் வறுமையை பயன்படுத்தி மக்களை தம்பக்கம் இழுக்கும் நோக்குடன் மக்களின் அத்தியாவசியப் பொருட்களை வழங்கி நல்லவர்கள்போல் நடிக்கத் தொடங்கியுள்ளது.

### குடாநாடு சுற்றிவளைப்பு

பூநகரி மற்றும் கிளிநொச்சி,கல்லுண்டாய், மண்டைதீவு மற்றும் கரையோரப்பகுதிகள் தீவுப்பகுதிகள் என இராணுவம் முன்னேறியுள்ளது. சுமார் பன்னிரண்டாயிரம் படைகள் குடாநாட்டை சுற்றிக் குவிக்கப்பட்டு தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளது.புலிகள் சிறைபிடிக்கப்பட்டுள்ள நிலையில் உள்ளனர்.

### தொண்டமானின் யோசனைகள்

பிரச்சனைக்கு தொண்டமான் புலிகளுடன் பேசுவதை புலிகள் பெரிதும் வரவேற்பதாக பாலசிங்கம் அண்மையில் யாழ்ப்பாணத்தில் கூட்டிய பத்திரிகையாளர் மநாட்டில் தெரிவித்துள்ளார். ஆனால் தொண்டமான் இனப்பிரச்சனையைத் தீர்க்க அரசியல் தீர்வுக்கான யோசனைகளை வெளியிட்டுள்ளார். இந்த யோசனைகள் புலிகளை மேலும் பெரும் தர்மசங்கடத்தில் மாட்டிவிட்டுள்ளன.

### செயலாளர் நாயகம் வரவேற்பு

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் (ஈ.பி.ஆர்.எல். எவ். ) செயலாளர் நாயகம் தோழர் க. பிரேமச்சந்திரன் (சுரேஷ் தொண்டமான் வெளியிட்டுள்ள யோசனைகளை பெரிதும் வரவேற்றுள்ளார். அண்மையில் சர்வகட்சி மநாட்டில் தமிழ்கட்சிகள் ஒருங்கிணைந்து கையளித்த எட்டு அம்ச யோசனைகளை ஒத்ததாக தொண்டமானின் யோசனைகள் உள்ளன. தொண்டமான் புலிகளுடன் பேசுவதோடு ஏனைய தமிழ் முஸ்லீம் கட்சிகளையும் அழைத்துப் பேசவேண்டும் என தோழர் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

### புலிகளின் நிலை என்ன ?

தாம் மட்டுமே தமிழ்மக்களின் ஏகப் பிரதிநிதிகள் என தமக்குத்தாமே பறைசாற்றிவரும் புலிகள் தமிழ்கட்சிகளின் யோசனைகளை ஒத்த தொண்டமானின் யோசனைகளை ஏற்கப்போகிறார்களா? தொண்டமானின் யோசனைகளை ஏற்பதென்பது தமிழ்கட்சிகளின் யோசனைகளை ஏற்பதாகும். தமிழ்கட்சிகள் எட்டு அம்ச யோசனைகளை முன்வைத்தபோது ஏதுமே செய்யாத (செய்ய விரும்பாத) அரசு அதே யோசனைகளை ஒத்த தொண்டமானின் யோசனைகளை ஏற்குமா?

மக்களுக்கு அமைதியும் சமாதானமும் ஜனநாயகமும்வேண்டி தொண்டமானின் யோசனைகளை ஏற்று ஆயுதங்களை கீழேவைத்து எஞ்சியுள்ள மக்களை காப்பாற்றுவது புலிகளின் கையிலேயே உள்ளது. புலிகளின் அடுத்த நடவடிக்கையை பொறுத்தே தாம் குடாநாட்டை கைப்பற்றுவதா இல்லையா என தீர்மானிக்கப்படும் என இராணுவத் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. விழுந்தாலும் மீசையில் மண்படவில்லை தானே என தமது தோல்விகளைமறைத்து இராணுவ நடவடிக்கைகளை புலிகள் தொடர்ந்தால் மக்கள் பேரழிவுக்குள்ளாவது தவிர்க்க முடியாததாகிவிடும்.




## ஈ.பி.ஆர்.எல்.எவ். தவிர்ந்த தமிழ்,முஸ்லீம்கட்சிகள் அரசுக்குஆதரவாகவாக்களிப்பு

தமிழ்பேசும் மக்களை சொல்லொணாத்துன்பங்களில் ஆழ்த்தி வரும் பிரேமதாசாவுக்கு,அவரது ஐக்கிய தேசியக்கட்சி அரசுக்கும் தமது ஆதரவுகளை தொடர்ந்து ஈ.பி.ஆர்.எல். எவ். தவிர்ந்த தமிழ் முஸ்லீம் கட்சிகள் வழங்கிவருகின்றன. எதிர் கட்சிகளால் கொண்டுவரப்பட்ட சபாநாயகருக்கு எதிரான பிரேரணையில் தமிழர் விடுதலைக் கூட்டணி, ரெலோ, முஸ்லீம் காங்கிரஸ், ஈ.என்.டி.எல்.எவ், ஈரோஸ் (சங்கர் ராஜி பிரிவு) ஆகியன பிரேமதாசாவைப் பலப்படுத்தும் முகமாக பிரேரணைக்கு எதிராக வாக்களித்தன.

அண்மையில் கொண்டுவரப்பட்ட தமிழ்பேசும்மக்களைப் பெரிதும் பாதிக்கும் அவசரகாலச் சட்ட நீடிப்புப் பிரேரணையிலும், அவசரகாலச் சட்டம் நீடிக்கப் படவேண்டுமென அரசுக்கு ஆதரவாக இக்கட்சிகள் வாக்களித்துள்ளதோடு அரசசார்பு எதிர்கட்சிகளாக தனித்து இயங்கப்போவதாக சபாநாயகரிடம் தெரிவித்துள்ளன. சபாநாயகருக்கு எதிரானபிரேரணையை ஆதரித்தும் அவசரகாலச் சட்டப்பிரேரணையை எதிர்த்தும் ஈ.பி.ஆர்.எல். எவ். பாராளுமன்ற உறுப்பினர்கள் ஐவரும் வாக்களித்துள்ளனர்.

**எமது மக்களுக்கு அமைதி ,சமாதானம், சமத்துவம், ஜனநாயகம் கிடைக்கும்வரை நாம் இறுதிவரை உறுதியுடன் போராடுவோம்**

www.padippakam.com



# எமது பார்வையில்

தமிழ்பேசும்மக்கள் மீது தான் தொடுத்திருக்கும் யுத்தத்தில் மீண்டும் ஒரு பாரிய அழுத்தத்தை கொடுக்கும் வகையில் பல்லாயிரக்கணக் கான துருப்புக்களை வடக்கு கிழக்கில் பிரேமதாசாவின் அரசு குவித் திருக்கிறது.

ஏற்கவே துன்பத்தில் தவித்திருந்த எமதுமக்கள் தற்போது வீடுகளிலிருந் தும்,வாழும் ஊர்களிலிருந்தும் விரட்டப்பட்டு ஆலயங்களும், பாடசாலைகளும் அகதிமுகாம்களாகும் அவலம் தொடர்கிறது.

எம்மக்களைக் கொன்றொழிப்பதற்காகவே வெளிநாடுகளில் கொள்வனவு செய்யப்பட்ட புதியவிமானங்கள் குண்டுகளைப்பொழிந்து எங்கள் மண்ணை கந்தகபூமியாக்குகின்றன.

அரசு வடக்கு - கிழக்கில் வாழும் எம்மக்கள் மீதான திட்டமிட்ட பொரு ளாதாரத்தடைகள் தொடர்கின்றன.சர்வதேச தொண்டர் நிறுவனங்களின் அழுத்தத்தின்பேரில் எமதுமக்களுக்காக அனுப்பப்பட்டுவந்த மிகக்குறைந்த அளவு நிவாரணப்பொருட்களின் அளவில்கூட பிரேமதா பாரியவெட்டுக் களை ஏற்படுத்தியுள்ளார்.

தமிழ்பேசும்மக்கள் வாழும்பிரதேசங்களின் அபிவிருத்திக்காக சர்வதேச நிதிநறுவனங்கள் வழங்கிய பெருந்தொகைபணத்தை பயன்படுத்தி திரு மலை, அம்பாறை உட்பட கிழக்கு மாகாணத்தின் பலபகுதிகளில் பிரேம தாசாவின் அரசு வெகுதாராளமாகவே திட்டமிட்ட சிங்களக்குடியேற்றங் களை முடுக்கிவிட்டுள்ளது.

புலிகளுக்கு ஆயுதம்வழங்கி பல்வேறுஅரசியல் தலைவர்களதும், அப்பாவி இளைஞர்களதும் படுகொலைக்குப் பின்னணியில் நின்ற பிரேமதாசாவின் அரசாங்கம் எக்காரணமுமின்றி கொழும்பு உட்பட பல்வேறு இடங்களில் கைதுசெய்யப்பட்ட அப்பாவித்தமிழ் இளைஞர்களை விசாரணைகள் எதுவு மின்றி சிறைகளில் வதைத்துவருகின்றது.

தனக்கும் தன்னைச்சார்ந்தவர்களுக்கும் எதிரான அரசியல்எதிர்ப்புக்களை ஜனநாயக விரோத நடவடிக்கைகள் மூலம் முடக்கிவருகிறார் ஸ்ரீலங்கா வின் ஜனாதிபதி பிரேமதாசா.

இத்தகைய ஜனநாயக விரோத,மக்கள் விரோத நடவடிக்கைகளில் வெகு முனைப்பாக ஈடுபட்டிருக்கும் ஜனாதிபதி பிரேமதாசா இன்னமும் சமாதா னத்தைப்பற்றி பேசுவது விந்தையாகும்.

தமிழ்,சிங்கள, முஸ்லீம்மக்களின் அனைத்து உரிமைகளையும் பறித்து அவர் களுக்கிடையிலான உறவுகளை உடைத்து அவர்களது அமைதியான வாழ்க் கைக்கு முற்றுப்புள்ளிவைத்த பிரேமதாசா மீண்டும் சமாதான முகமூடி அணிந்து இலங்கைக்கு உதவும் நாடுகளிடம் நிதிஉதவி பெறமுற்பட்டுள்ளார்

இப்படிப்பெறப்படும் பணத்தின் பெரும்பகுதி அபிவிருத்திக்காக அல்ல எமதுமக்களைக் கொன்றொழிக்கும் ஆயுதக்கொள்வனவுக்காகவே என்பதை நாம் மறந்துவிடக்கூடாது.

அதேசமயம் ஆனையிறவிலும்,மணலாற்றிலும்,முல்லைத்தீவிலும் ஆயிரக்கணக் கான அப்பாவித்தமிழ் பாலகர்களை பலிகொடுத்தும் படுகாயத்துக்குள் ளாக்கியும்கூட பிரபாகரன் கும்பலின் இரத்தவெறி இன்னமும் அடங்கவில்லை எமதுதேசம் சிதைவதற்கும் எமதுமக்களின் வாழ்வு சீரழிவதற்கும் காரண மாகியும் பிரபாகரன் கும்பலின் அதிகாரவெறி அடங்கவில்லை.

எமதுமக்களின் இத்தனைதுன்பங்களுக்கும் காரணமான பிரேமதாசா, பிர பாரன் ஆகிய இருவருமே ஒருவரைஒருவர் பாதுகாக்கும் சித்துவிளையாட் டில் மீண்டும் ஈடுபட்டுள்ளனர்.

எமதுமக்களின் இரத்தத்திலே கைகளைநனைத்துள்ள இந்த இரு சர்வாதி காரிகளுமே அடுத்து வரும்யுத்தத்துக்கும், அதிகாரபேரத்துக்கும் வசதி யாக உதட்டளவில் சமாதானத்தைப்பற்றி பேச ஆரம்பித்துள்ளனர்.

இந்தநிலையில் எதிர்காலம் குறித்த சகல நம்பிக்கைகளையும் இழந்து விட்ட எமதுமக்கள்.... அடுத்தவேளை உணவுக்கே வழியற்றுப்போன எமது மக்கள்.... ஒருகுறிப்பிட்ட கூட்டத்தின் அதிகாரவெறிக்காக தமது அன்புக் குரியவர்களை....அன்றாட வாழ்க்கையினை இழந்துவிட்ட எமதுமக்கள்.... பாசிஸ்டுகளின் படுபயங்கர அடக்குமுறைகளின்கீழ் தவிக்கும் எமது மக்கள் .... இவர்கள்குறித்து சிந்திக்காமல் நாம் எப்படியிருக்கமுடியும். இத்தனை துன்பங்களைத்தாங்கியும் கூட இன்னமும் எம்தேசத்தைவிட்டு நீங் காமல் நிற்கும் இலட்சக்கணக்கான எமதுமக்களும் அகதிகளாக வெளி யேறிவிடவேண்டும் என்றும் இல்லாமல் முதலில் எமதுமக்களது அன்றாட வாழ்க்கை சீரடைவதற்கும் தொடர்ந்து நாம் எமது அடிப்படை உரிமைக ளைப் பெறுவதற்கான ஆக்கபூர்வமான செயற்களை அனைத்து வேறுபாடு களையும் கடந்து நாம் செய்யவேண்டும்.

ஐரோப்பிய சுகவாசத்தை அனுபவித்துக்கொண்டு எம்தேசத்தின் இழப்புக் களை அலட்சியம்செய்து"போராட்டம் என்றால் இழப்புக்கள் இல்லாமலா" எனப் புரட்டுக்கதைகள்பேசும்புலிகள்.... சித்தாந்த பித்தம் தலைக்கேறி உலகின் இன்றைய அரசியல் அசைவுகளை...யதார்த்தத்தைப் புரிந்துகொள் ளாமல்... எந்தத்தீர்வுகளையும் நிராகரித்துவரும் தத்துவவித்தகர்கள்... அடக்குமுறையாளர்களோடு சமரசத்துக்குப்போகும் சந்தர்ப்பவாதிகள் போன்றோரை நிராகரிப்போம்.

எமதுமக்களின் துன்பங்களுக்கு முற்றுப்புள்ளிவைக்கவேண்டும். எமதுஅடிப்படை உரிமைகளைப் பெறுவதற்கான அழுத்தங்களைக் கொடுக்கவேண்டும் என்ற அடிப்படை நோக்கில் உடன்படக்கூடிய சக்திகள் அனைத்தும் தமக்கிடையே யான நடைமுறை வேறுபாடுகளை களைந்து உள்நாட்டிலும்,சர்வதேசரீதியாக வும் பிரேமதாசாவின் அரசாங்கத்துக்கும், பிரபாகரனின் புலிகளுக்கும் நெருக்குவாரத்தைக்கொடுக்கும் முயற்சிகளில் விரைவாகவும் வெகு தீவிர மாகவும் ஈடுபடவேண்டும். இத்தகைய முயற்சிகளில் ஏற்படும் தாமதம் அல் லது தவறுகள் எமதுமக்களின் துன்பங்களை தொடரச்செய்யும்....அடிமைவாழ் வின் அவலங்களை நீடிக்கும் என்பதை அனைத்துசக்திகளும் உணர்ந்து கொள்ள வேண்டும்.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★

# முகத்தாரின் முணுமுணுப்பு



சா... என்ன பொறுக்கித்தனம். நல்ல சந்தர்ப்பம் சா..., பத்திரிகைச்செ ய்திகளை ஒரு அலசு அலசிய முகத்தார் முணுமுணுத்தவாறே நடக்கிறார்.

ஜனநாயகம் எண்ட போர்வைக்குள்ள இருந்து கொண்டு எத்தனையோ ஆயி க்கணக்கான அப்பாவிச்சனங்களையும் அரசியல் தலைவர்களையும் கொலை செய்து கொண்டிருந்த அயோக்கிய பிரேமதாசாவை துரத்தற சந்தர்ப் பம் கிடைச்சும் இந்தப்பச்சோந்தியள் பயந்திட்டுதுகள். வெறும் பணத்துக்கும் புகழுக்கும் அடிமைப்பட்ட கூட்டங்கள் இருக்கிற வரைக்கும் நல்லது நடக்கி றது கஷ்டம்தான்.

சரி இந்தசிங்கள அரசியல்வாதியள் தான் பிழைப்புக்காக அயோக்கியத் தனம் செய்யுதுகள் எண்டால் எங்கட தமிழ்குடிஅரசியல்வாதியள் அதைவிட மோசம். அதுவும் இந்தச்சூழ்நிலையி லை,ஒருவேளை சாப்பாட்டுக்கே கதி யில்லாமல் இருக்கிற நேரத்தில,சாம் பலிலையும் பனங்களியிலையும் எங்கட சனம் உடுப்புத்தோச்சுப் போடுற நி லையிலையும், ஒவ்வொரு நிமிஷமும் செத்துக்கொண்டிருக்கிற இந்தசமயத் திலுமா இப்பிடி நடக்கிறது.

புலிப்பொடியளைத்தான் விடுவம் அவங் கள் பிரேமதாசாவின்ரை எடுபிடியா ளா இண்டைக்கு நேற்றா இருக்கிறானு கள். இந்தியசமாதானப்படை இலங்கை வரமுதலே இருக்கிறஉறவுதானே. புலி யளுக்கும் பிரேமதாசாவுக்கும் இருக்கி ற ஒப்பந்தமே தனிதானே.அதுமக்களா இருந்தாலென்ன மண்ணாங்கட்டியா இருந்தாலென்ன இலையானுக்கு சுத்திய லால அடிச்சமாதிரி ஒரேஅடிதான். இருந்த இடம் தெரியாமல் அழிக்கிறது இந்த அடிப்படையிலை எத்தனை தலை வர்கள்,அறிஞர்கள் இல்லாமல் போன வை. தாங்கள்மட்டும் சர்வாதிகாரி யாக இருக்க ஆசை.உலகம் தெரியாத பிறப்புகள்.இல்லாட்டில் பிரேமதாசா வின்ர அதிகாரத்தை காப்பாற்ற ஆறு எம். பி. மாரை அனுப்புவினமா?

புலிப்பொடியளின்ரை புலூடாஇண்டைக் கு உலகம்முழுக்க வெளிச்சமாய் போச் சு. உலகத்தையே நாறவைச்ச புலியளு க்கு பிரேமதாசாவையும் விட்டா இனி வேறஒருவழியும் இல்லை.

ஆனால் ஜனநாயகத்தைப் பற்றியும், தமிழ்மக்களின்ர விடுதலையைப்பற்றி யும் நீலிக்கண்ணீர்வடிக்கிற சிலதமிழ் குழுக்கள், புலிகள் தங்களுக்கு தடைமா திரியும் அது இல்லாட்டில்..., பிரேம தாசாவின்ரை அரியாசனத்தை காப் பாற்ற வெளிக்கிட்டிருக்கினம் எண்டா இவையள் தமிழ்மக்களுக்கு தலமை தாங் கிற தகுதி இருக்குது எண்டதை உலகத் துக்கு நிரூபிச்சுபோட்டினம்.

★ ★ ★ ★ ★ ★ ★

# செய்திச் சிதறல்கள்.......

ஈரோஸ் என்ற பெயரில் கொழும்பு சென்ற புலிகள் குழுவினர் யாவரும் யாழ்ப்பாணம் திரும்பிவிட்டனர் என்று அரசு அறிவித்துவரும் வேளையில் இக்குழுவில் அங்கம்வகுத்த முன்னாள் மாநகரசபைஆணையாளர் சி.வி.கே சிவஞானம் கொழும்பில் தங்கியிருந்து அரசுடன் இரகசிய பேச்சுவார்த் தை நடாத்திவருகிறார். தான் பழைய ஐ.தே.கட்சி ஆதரவாளர் என்றும் ஜனாதிபதிக்கு நெருங்கிய தொடர்புடையவர் என்றும் கூறிவருகிறார்.

இலங்கைக்கடற்படையினரின் கட்டுப்பாட்டில் உள்ள காரைநகர் பிரதே சத்திற்குள் மீளக்குடியமர விரும்பும் ஊர்மக்களிடம் புலிகள் இரண்டு தங் கப்பவுண்களை அறவிட்டுவருகின்றனர். காரைநகர் தமது கட்டுப்பாட்டுக் குள் இல்லாதபடியால் அதனை ஸ்ரீலங்காவின் ஒரு பகுதியென தாம் கருது வதாக மக்களிடம் தமதுகொள்ளைக்கு நியாயம் கற்பிக்கின்றனர்.

ஆனையிறவு,முல்லைத்தீவு யுத்தங்களில் புலிகள்தரப்பில் ஏற்பட்ட பாரிய இழப்புக்களைத் தொடர்ந்து புலிகள்பலர் மனச்சோர்வு அடைந்துள்ளதா கவும், இவர்களில் இயக்கத்தை விட்டு வெளியேறமுற்பட்ட சிலர் உளவா ளிகள் என முத்திரைகுத்தப்பட்டு காணாமல்போகின்றனர்என வவுனியா வருவோரிடமிருந்து தெரியவருகிறது.

அண்மையில் பாராளுமன்றம் கூடியபோது பத்து நிமிடங்களில் ஐம்பத்தெ ட்டு பிரேரணைகள் அரசினால் நிறைவேற்றப்பட்டன. எதிர்கட்சிகளின் எந்தவித ஆலோசனையும் இல்லாமல் ஒரு தலைப்பட்சமாக இப்பிரேர ணைகள் நிறைவேற்றப்பட்டுள்ளன. உலகில் எந்தவொரு நாட்டிலும் நடை பெறாத இந்நிகழ்ச்சி, உலகஅதிசயங்களைப் பதிவுசெய்யும் கின்னஸ் புத்தகத்தில் பதிவுசெய்யப்பட்டால் ஆச்சரியப்படுவதற்கில்லை.

அண்மையில் லண்டன் பி.பி.சி. தொலைக்காட்சிச்சேவையில் "தற்கொ லைக்கொலையாளிகள்" என்றதலைப்பில் புலிகள் பற்றிய நிகழ்ச்சி ஒன்று ஒளிபரப்பாகியுள்ளது. உலகிலேயே மனிதாபிமானமற்ற மிகவும் கொடூரமானவர்கள் என புலிகள்குழுவினரை, இந்நிகழ்ச்சிதயாரிப்பா ளர் வர்ணித்துள்ளார். அத்துடன் பிரபாகரனை மாபியா சம்பந்தமாக வெளிவந்த திரைப்படத்தில் அனைவரையும் இரக்கமின்றி சுட்டுக்கொல் லும் கதாபாத்திரத்துக்கு ஒப்பிட்டு வர்ணித்துள்ளார்.

வடபகுதியிலிருந்து புலிகளால் லட்சக்கணக்கான முஸ்லீம்மக்கள் விரட்டி யடிக்கப்பட்ட ஓராண்டு நினைவாக வவுனியாவில் கர்த்தால் அனுஷ்டிக் கப்பட்டது. முஸ்லீம் அகதிகள் புனர்வாழ்வுக்கழகம் இக்கர்த்தாலைஒழுங்கு செய்திருந்தது.

சர்வகட்சிமாநாட்டில் லிபரல்கட்சியினால் முன்வைக்கப்பட்ட செனற் சபை பிரேரணைக்கு சிலதமிழ்கட்சிகள் ஆதரவுதெரிவித்துள்ளன. செனட்சபைகுறித்து ஈ. பி. ஆர். எல். எவ். பேச்சாளர் ஒருவர் கருத்து தெரிவிக்கையில் "நிறைவேற்றுஅதிகாரம்கொண்ட ஜனாதிபதியாலும் பாராளுமன்றத்தாலும் தீர்த்துவைக்கமுடியாத இனப்பிரச்சனையை மக்கள் அங்கீகாரம் இல்லாத இச்செனட்சபையா தீர்த்துவைக்கப்போகிறது" என்று தெரிவித்துள்ளார்.

www.padippakam.com



# முறிந்த பனை 5



திருமதி ரஜனிதிரணகம,மூன்றுவிரிவுரையாளர்களுடன் சேர்ந்துஎழுதிவெளியிட்ட "THE BROKEN PALMYRAH" (முறிந்தபனை என்னும் நூலின் தமிழாக்கத்தின் சிலபகுதிகள் "விடுதலை" பத்திரிகையில் 01.01.1990.முதல் வெளிவந்துள்ளது.அதனை தொடர்ச்சியாக இங்கே மறுபிரசுரம் செய்கிறோம்.

**இந்நூலை எழுதிவெளியிட்டதன் காரணமாகவே ரஜனி கொலைசெய்யப்பட்டார். யா/பல்கலைக்கழக மருத்துவபீட உடற்கூற்றியல்துறை தலைவராக இருந்த திருமதி ரஜனிதிரணகம, தமது சகோதரியான திருமதி நிர்மலாநித்தியானந்தன் போலவே புலிகள்இயக்கத்திலிருந்து முரண்பட்டு வெளியேறியவர். தமது அமைப்பிலிருந்து முரண்பட்டுவெளியேறி, விமர்சிப்பவர்களுக்கு புலிகள்வழங்கும் தண்டனை,இவருக்கு 35 ஆவது வயதிலேயே வழங்கப்பட்டது.**

## மக்கள் இன்னமும் தங்கள்எதிர்ப்பினை மௌனமாகவே தெரிவிக்கின்றனர்.

அச்சுவேலி, சரமாரியான ஷெல்தாக்குதலின்பின் மீளக்கைப்பற்றப்பட்டது. பி.பி.ஸி. நிருபரான"மாக்டெலி" என்பவர் யாழ்ப்பாணத்தை அடுத்த 48 மணிநேரத்தினுள் கைப்பற்றும் நோக்கத்தை பலாலிஇராணுவ தலமையகம் கொண்டிருந்ததாகக் கூறினார்.

புலிகள் இயக்கம் மிகமோசமான கதியிலிருந்தது.அவர்களது வாய்வீச்சு அதிகமாக இருந்தபோதும், தெற்குப்புறமாக ஸ்ரீலங்காவை நோக்கி அல்லது இந்தியாவை நோக்கி பறந்தோடினார்கள்.

பதுங்கு குழிகளில் அடைக்கலம் புகுந்திருந்த மக்களும் மொத்தத்தில் சுடப்பட்டார்கள். அதேபோல் ஊரடங்குசட்டத்தை மீறியவர்களும் அவர்கள் அபாயமற்றவர்களாக இருந்த போதிலும் சுடப்பட்டார்கள்.

இதனைத்தொடர்ந்து யூன்மாதம் மூன்றாம் திகதியளவில் இந்தியமீன்பிடிக்கலங்களில் உதவிப்பொருட்கள் நன்கு பகிரங்கப்படுத்தப்பட்ட முறையில் வந்தன. அவை இலங்கை எல்லையில் நுழைய அனுமதி மறுக்கப்பட்டதும், மறுநாளே விமானம் மூலமாக 25 தொன் உணவுப்பொருட்கள் யாழ்ப்பாணத்திற்கு வழங்கப்பட்டது இது ஸ்ரீலங்கா தாக்குதலின் முடிவைக்குறித்தது.

புலிகள் தம்மைப்பற்றிய மதிப்பும், பெருமைகளும் தோல்வியடைந்ததை உணர்ந்துகொண்டார்கள். முன்முயற்சி அனைத்தும் இப்போது திடமாகப் பாக்குநீரிணையில் குறுக்காகவே அமைந்திருந்தது. பிரபாகரன் இந்தியாவின் மனிதாபிமான உணர்வுகளைப் பற்றி வரவேற்பறிக்கையை வெளியிட்டார்.

பத்திரிக்கைகளில் (முக்கியமாக இந்தியன் எக்ஸ்பிரஸ் ஆயுதவிற்பனையில் உயர்மட்டத்தில் நடந்த ஊழல்கள் சம்பந்தமாக பெருமளவில் தடுமாறிக்கொண்டிருந்த பிரதமர் ராஜீவ் காந்தியின் அரசானது (2 கோடி பவுண் போஃபர்ஸ் ஊழலிலும், 1 1/2 கோடி பவுண் ஜேர்மன் நீர்மூழ்கிக்கப்பல் சம்பந்தமான மோசடியிலும்...)இப்போது இலங்கைத்தமிழ் மக்களின் உடனடிக் கதாநாயகன் ஆனார்.

ஆனால் பொதுசன அபிப்பிராயம் உறுதியான கொள்கையில் தங்கியிராமல் களநிலைமைகளிலேயே தங்கியிருந்ததால்,அதுமிகவும் மாற்றக்கூடிய நிலையற்ற தன்மைவாய்ந்ததாக இருந்தது.

இந்தத் தாக்குதலானது, தமிழர்களை அழிவைப் பொருட்படுத்தத் தேவையில்லாத சனத்தொகையாகக் கருதப்பட்டு பிறபயன் கருதும் நோக்கங்களுடன் நடத்தப்பட்டது. சர்வதேச அபிப்பிராயத்தைத் திருப்திப்படுத்தும் வகையில் தமிழ்ப் பகுதிகளை அமைதிப்படுத்துவதே பிரச்னையாக இருந்தது. இந்த எல்லைக்குள் தாக்குதலின் திட்டமிடலும் நடைமுறையும் இராணுவத்தைப் பொறுத்தவரை மெச்சத்தக்கதாகவே இருந்தது.

ஆனால்,தமிழ்மக்கள் இந்தநாட்டின் சமத்துவமான பிரஜைகள்தான் என மதிக்கப்பட்டிருந்தால் அல்லது உயிரும் உணர்வுகளும் மதிக்கப்படும் மனிதர்களாகக் கருதியிருந்தால் அல்லது இழந்த பெருமைகளை மீண்டும் உறுதிப்படுத்திக்கொள்வதற்கு உற்சாமூட்டப்படவேண்டுமெனக் கருதியிருந்தால் ஏற்கக்கூடியதாக அமைந்திருக்கலாம். இத்தாக்குதலானது பலநிராகரிக்கத்தக்க அம்சங்களைக் கொண்டிருந்தது.

உண்மையில் மோதல் நடக்காத பல இடங்களில் - மக்கள் பிரதேசங்களில் அதிகமான குண்டுவீச்சுக்கள் நடைபெற்றிருந்தன. அதைத்தொடர்ந்த வானொலி ஒலிபரப்பில், மக்கள் வழிபாட்டுத்தலங்களிலும்,பாடசாலைகளிலும் ஒன்றுகூறும்படி கேட்கப்பட்டிருந்தான முற்கூறிய இடங்களில் இருந்த போதியளவு இடவசதியற்ற தன்மையைக் குறைத்தது.

அகதிகள் நிலையங்களாகக் கருதப்பட்ட மூன்று வழிபாட்டுத்தலங்களும் குண்டுவீச்சுக்கு இலக்காகின.ஒருகுண்டு விழுந்த அல்வாய் மாரியம்மன் கோவில் முப்பத்தைந்து பேருக்கு மேற்பட்டோரைக் கொண்டிருந்தது.

புலிகள் தம்மைபற்றிய மதிப்பும் பெருமைகளும் தோல்வியடைந்ததை உணர்ந்துகொண்டார்கள். அவர்களின் முன்முயற்சி அனைத்தும்இப்போது திடமாகப் பாக்குநீரிணையில் குறுக்காகவே அமைந்திருந்தது. பிரபாகரன் இந்தியாவின் மனிதாபிமான உணர்வுகளைப்பற்றி வரவேற்பறிக்கையை வெளியிட்டார்.

பதுங்கு குழிகளில் அடைக்கலம் புகுந்திருந்த மக்களும் மொத்தத்தில் சுடப்பட்டார்கள்.அதேபோல ஊரடங்குச்சட்டத்தை மீறியவர்களும் அவர்கள் அபாயமற்றவர்களாக இருந்தபோதிலும் சுடப்பட்டார்கள்.

விமானத் தாக்குதலிலிருந்தும், குண்டுவீச்சிலிருந்தும் தங்களைப் பாதுகாத்துக் கொள்ள பதுங்குகுழிகளை வெட்டியிருந்தவர்களும் புலிகளின் ஆதரவாளர்களெனவே படையினருக்குச் சொல்லப்பட்டிருக்க வேண்டும். புலிகளின் சார்பான இடங்களென முன்னர் குறிக்கப்பட்டிருந்த வதிரி,கொற்றாவத்தை போன்ற இடங்களில் பல இளைஞர்கள் எதுவித கேள்வியுமின்றிச் சுடப்பட்டார்கள். சில வேளைகளில் பணயக்கைதிகளாக, விசாரணையின் பின் விடுவிக்கப்படுமென பெற்றோரிடமிருந்து கேட்டு அழைத்துச்செல்லப்பட்டவர்களும் சுடப்பட்டார்கள்.

கம்பர்மலையில் இறந்த போராளிகளை ஞாபகப்படுத்தும் போஸ்டர்களைக் கண்டஇடங்களிலெல்லாம் படையினர் அட்டகாசம் செய்தனர்.

நிலக்கண்ணி வெடிகள் திருமலையிலும் மட்டக்களப்பிலும் அரசபடைகளைக் கொன்றபோது நாங்கள் ஆர்ப்பரிப்பது வழக்கம். சுற்றாடலில் இருந்த அப்பாவி மக்களுக்கு என்ன நடந்ததென்பதை நாம் புறக்கணித்தோம்.

பரந்த அளவில் துப்புக்களால்(நகைகள்) கொள்ளையிடப்பட்டன.

இதேமாதிரியான சம்பவங்கள் பருத்தித்துறையிலும் திரும்பவும் நடந்தன. யூன் முதலாம்திகதி முதல் அகதி முகாமாகத் தீர்மானிக்கப்பட்ட புற்றளைப் பிள்ளையார் கோவில் படையினரால் சுற்றிவளைக்கப்பட்டபோது,பல இளைஞர்கள் சந்தேகத்தின் பேரில் பெற்றோரிடமிருந்து பிரித்து அழைத்துச் செல்லப்பட்டனர்.

பொறியியல் கல்லூரி மாணவன் வல்வெட்டித்துறை அடையாள அட்டை வைத்திருந்த காரணத்தால், தாயார் முன்னிலையிலும் ஏனையஅகதிகள் முன்னிலையிலும் சுட்டுக்கொல்லப்பட்டார். அவர்கள் திரும்பித் தமது வாகனங்களை நோக்கிச் செல்லும் போது மேலும் ஐந்து பேரைச் சுட்டுக் கிணற்றில் எறிந்து விட்டுச் சென்றனர்.

நெல்லியடி முருகன் கோயில் அகதி முகாமில் தடுத்துவைக்கப்பட்டிருந்த கணித உதவி விரிவுரையாளரான திரு. ரகுதீஸ்வரனும் மேலும் சிலரும், மேமாதம் முப்பத்தியோராம் திகதி நெல்லியடிச்சந்தியில் பிரிகேடியர் கொப்பேகடுவவினால் சிறிது நேரம் பேட்டி காணப்பட்டார்கள். அதன் பிறகு அவர்கள் கைவிலங்கிடப்பட்டு நெல்லியடி மத்தியமகா வித்தியாலயத்தில் தடுத்துவைக்கப்பட்டார்கள். வழியில் அவர்களை ஓடச்சொல்லி விட்டுச் சுட்டதில் மூவர் இறந்தனர் இறந்துவிட்டதாகக் கருதப்பட்ட ரகுதீஸ்வரன் பின்னர் கைக்காயங்களுடன் தப்பியிருந்தார்.

சாதாரண விமானக்குண்டு வீச்சைவிட "அவ்றோ"போக்குவரத்து விமானங்களிலிருந்து வீசப்பட்ட பரல் குண்டுகள் என அழைக்கப்படுபவையின் பாவனை மோசமாக இருந்தது.ரப்பர் போன்ற எரியக்கூடிய பொருட்களால் மூடப்பட்டிருந்த எரிபொருட்களைக் கொண்ட பரலானது குறிப்பிட்ட இலக்குகளில் மட்டும் சரியாகப்போடப்படமுடியாத பருமட்டான வடிவமமைப்புடையதாகக் காணப்பட்டன. இவை நிலத்தில் மோதியதும் வெடிக்கக் கூடியதாயிருந்தது. வெடித்ததும் ரப்பர் கவசமானது எல்லாப் பக்கங்களிலும் சிதறிப் பறந்தது தோல்களில் ஒட்டிக்கொள்வதன் மூலம் ஆட்களைக் கொல்லக் கூடியதாக இருந்தது.

வல்வெட்டித்துறையில் இவை பெருமளவு போடப்பட்டன.(ஒரு முறை நாற்பத்தி எட்டு போடப்பட்டதையும் சேர்த்து ) குடாநாட்டின் ஏனைய பகுதிகளிலும் பரவலாக இப்பரல் குண்டுகள் போடப்பட்டன. யாழ்ப்பாணம் கே. கே. எஸ். வீதியிலுள்ள சிவன்கோவிலில் விழுந்த ஒரு குண்டானது பதினேழு பேரைப் பலிகொண்டது. இது இராணுவ நோக்கமற்ற கொடூரச்செயல் புரிபவரின் செயலாகக் காணப்பட்டது.

வடமராட்சி மக்களைப்பொறுத்தவரையில் வல்வெட்டித்துறையைச் சுற்றியே பெருமளவான உடமைகள் சேதப்படுத்தப்பட்டன.ஆனால் தாக்குதலின் உயிரிழப்பைப் பொறுத்தவரையில், எதிர்பார்த்ததைவிட உக்கிரம் குறைந்ததாகவே இருந்தது.

வல்வெட்டித்துறையைச்சுற்றிலும் குண்டுவீச்சும்,ஷெல்லடிகளும் ஆரம்பமானபோது, இயலக்கூடிய அனைவரும் கிழக்குப்புறம் நகர்ந்தனர். பெருமளவு மக்கள் அகதிகளாக தென்மராட்சியைச்சென்றடைந்தனர்.

மூன்றாம்நாளின்பின் புலிகள் பின்வாங்கிவிட்ட உண்மையும், புதியநிலைகளை ஸ்தாபித்துக்கொள்ளச் சந்தர்ப்பமற்ற நிலைமையும் இராணுவம் பருத்தித்துறைக்கு முன்னேறினாலும் மனித உயிர் இழப்புகள் குறைவதற்கு உதவியது.

சிறீலங்கா இராணுவத்தைப்பற்றிய, மனம் ஏற்றுக்கொள்ளாத ஒரு வியப்புணர்ச்சியும் மக்களிடையே நிலவியது. பலர், புலிகள் தங்களைக் கஷ்டத்தில் விட்டுவிட்டு தாம்எங்கேசெல்கிறோம் என்பதைச் சொல்லாமல் தப்பியோடிவிட்டார்களென்று புலிகளைத் தூற்றினார்கள்.

கம்பர்மலையைச் சேர்ந்த தர்மர் போன்ற இன்னும் சிலர் பின்வரும் நோக்கினைக் கொண்டிருந்தார்கள். "பெடியன்கள் கடுமையாக முயற்சிக்கவில்லையென நான் சொல்லவில்லை. நிலக்கண்ணிவெடித் தடைகளையெல்லாம் உடைத்துக்கொண்டு இராணுவத்தினர் தொண்டமனாற்றிலிருந்து வெளியேறியதும் அவர்களால் ஓடுவதைத் தவிர ஒன்றும் செய்யமுடியவில்லை. பெடியளால் ஷெல்களை, ஏ.கே 47 குண்டுகளைக்கொண்டு தடுக்கமுடியவில்லை. இராணுவமானது பேய் போல் முன்னேறிக்கொண்டிருந்தது - காயப்பட்டு

ஸ்ரீலங்கா இராணுவத்தைப் பற்றிய மனம் ஏற்றுக்கொள்ளாத ஒரு வியப்புணர்ச்சியும் மக்களிடையே நிலவியது.பலர் புலிகள் தங்களைக் கஷ்டத்தில் விட்டுவிட்டு தாம் எங்கே செல்கிறோம் என்பதைச் சொல்லாமல் தப்பியோடிவிட்டார்களென்று புலிகளைத் தூற்றினார்கள்.

விழுந்தவர்களைக் கண்டதாகவே காட்டிக்கொள்ளவில்லை. நாமோ பெடியன்களோ இதை எதிர்பார்க்கவில்லை..." எனக்கூறினார் அவர்.

பிரபாகரன் உட்படபல தலைவர்களின் வீடுகள் அங்கு இருந்ததால் வடமராட்சி புலிகளின் ஆதரவுப்பிரதேசம் எனக் கருதப்பட்டது. புலிகள் இயக்கமானது வடமராட்சியில் அன்றைக்குத் தாம் இழந்த நம்பகரத்தன்மையை இன்றுவரை மீளப்பெறமுடியவில்லை.

பெரும்பாலான மக்கள் யுத்தத்தினால் நலிவடைந்து போயிருந்தமையால், அவர்கள் சிறீலங்கா இராணுவத்தால் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் நிலையை ஏற்றுக்கொள்ளும் நிலைமைக்கு வந்திருந்தார்கள்.

"சிங்களவர்கள் எரிச்சலூட்டப்படும் போது கோபம் அடைவார்கள். ஆனால் அமைதிஅடையும் போது அவர்களும் சரியாகி விடுவார்கள்"என்று கூறத்தொடங்கினார்கள். புலிகள் இயக்கம் வடமராட்சியைவிட்டு விலகிவிடும்என மக்கள் நம்பினர்.

இரண்டு வாரங்களின் பின் புலிகள் திரும்பவும்வந்து நிலக்கண்ணி வெடிகளை வைக்கமுனையும்போது, இராணுவத்திற்கு உடனடியாகவே தகவல் கிடைத்தது. தாம் அதிகம் துன்பப்பட்டுவிட்டதாகவும், தமக்குஇனி அமைதி தேவை என்பதே பெருமளவு மக்களின் உணர்வாக இருந்தது. ஆனால் புலிகள் இயக்கம் வேறுவிதமாக நினைத்தது.

(தொடரும்)

படிப்பகம்

www.padippakam.com



# அரசு...புலிகள்

# கூட்டு அம்பலம் ! !

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் செயலாளர் நாயகமும், யாழ்/மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான தோழர்.க.பிரேமச்சந்திரன் (சுரேஷ்) அவர்கள், அண்மையில் பாராளுமன்றத்தில் ஆற்றிய உரையிலிருந்து....



## கௌரவ பிரதிச்சபாநாயகர் அவர்களே !!!

இன்று இங்கே T. N. A தொடர்பாகவும், புலிகளுக்கு ஆயுதம் கொடுத்தமை தொடர்பாகவும் வேறுபட்டகதைகள், பேச்சுக்கள், அரசாங்கத்திடமிருந்து வரும் தகவல்கள், பாதுகாப்பு அமைச்சினால் வெளியிடப்பெற்ற தகவல்கள் போன்ற பல்வேறு பட்டயங்கள் வெளிவந்த வண்ணமுள்ளன. இந்தநிலையில் சிலவிடயங்களை இந்தச் சபையின் கவனத்திற்குக் கொண்டுவருவதோடு சில விடயங்களைத் தெளிவுபடுத்தவும் வேண்டிய ஒரு பொறுப்பும் கடமையும் எனக்கு இருப்பதாக நான் கருதுகிறேன். ஏனென்றால், அரசாங்கம் அண்மையில் வானொலியிலும் தொலைக்காட்சியிலும், 1989ம் ஆண்டு திரு. வரதராஜப்பெருமாளால் நடத்தப்பட்ட வடக்கு-கிழக்குமாகாண சபையினால் உருவாக்கப்பட்ட தமிழ்த் தேசிய இராணுவத்தை அழித்தொழிப்பதற்காகவே புலிகளுக்கு தாம் ஆயுதங்களைக் கொடுத்ததாகத் திரும்பத்திரும்பக் கூறிவருகிறது. இந்தத் தமிழ்த் தேசிய இராணுவத்தைப் பற்றிய சில விடயங்களை நான் இங்கே குறிப்பிட விரும்புகின்றேன்.

> அடுத்த இரண்டு மூன்று வருடங்களுக்கான கொள்கைத் திட்டங்கள் குறித்து கௌரவ ஜனாதிபதி அவர்களால் இன்று இங்கு கூறப்பட்டது. ஆனால் வடக்கு-கிழக்கு மாகாண பிரச்சனைகளுக்கான தீர்வு எதுவும் இதில் முன்வைக்கப்பட்டதாக எனக்குத்தெரியவில்லை.

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியானது முதன்முதல் ஆயுதங்களைக் கையளித்து ஜனநாயகப் பாதைக்கு வந்தது. வடக்கு- கிழக்கு மாகாணங்களில் ஏனையசகல குழுக்களும் மிகவும் பயந்துபோய் இருந்த காலகட்டத்தில் - எல்.ரீ.ரீ. யால் அடக்கியொடுக்கப்பட்டுக் கொலை செய்யப்பட்டுக்கொண்டிருந்த காலகட்டத்தில்- நாம் துணிந்து முன்வந்து மாகாணசபைத் தேர்தலில் கலந்துகொண்டோம். தேர்தல் சரியானதா பிழையானதா என்பதல்ல இங்கே கேள்வி. அந்தத்தேர்தலின்பின்னர்தான் வடக்கு- கிழக்கில் ஒரு ஜனாதிபதித் தேர்தலையோ, ஒரு பாராளுமன்றத் தேர்தலையோ நடத்த முடிந்தது. ஆரம்பத்தில் மாகாணசபைத் தேர்தலில் கிழக்கு மாகாணத்தில் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி, முஸ்லிம் காங்கிரஸ், E. N. D. L. F. போன்றவை கலந்துகொண்டன. ஐக்கிய தேசியக் கட்சியும் கலந்துகொண்டது. அதுபோல் வடக்கு மாகாணத்தில் தேர்தல் நடைபெறாமலேயே மாகாணசபைக்கான நியமனங்கள் நடைபெற்றன. நான் இதை ஏன் இங்கே குறிப்பிடுகிறேனென்றால், இதன்பின்னர் தான் வடக்கு- கிழக்கு மாகாணங்களில் நடைபெற்ற பாராளுமன்ற தேர்தலில் பத்துக்குமேற்பட்ட கட்சிகள் போட்டியிட்டு பல பாராளுமன்ற உறுப்பினர்கள் தெரிவுசெய்யப்படக்கூடிய காலமொன்று ஏற்பட்டது. குறைந்தபட்ச ஜனநாயகம் அங்கே உருவாக்கப்பட்டது என்பதனால்தான். ஆனால் பின்னர் என்ன நடந்தது ? பதின்மூன்றாவது அரசியலமைப்புத் திருத்தச் சட்டத்தின் பிரகாரம் வடக்கு, கிழக்கு மாகாண சபைக்கு மாகாண பொலிஸ் கொமிஷன் அமைக்க உத்தரவு கொடுக்கப்பட்டிருக்குமாயின், அதன்கீழ் அவர்கள் தமக்குத்தேவையான பொலிஸ் படையை அமைத்திருப்பார்கள்.

ஆனால், இந்த மாகாணசபைகள் உருவாக்கப்பட்டு இன்றுவரை எந்தவொரு மாகாணத்துக்கும் மாகாணபொலிஸ் கொமிஷன் நியமிக்கப்படவில்லை.

1989ம் ஆண்டு PRESIDENTIAL ORDINANCE இன்கீழ் வடக்கு கிழக்கு மாகாணசபைக்கு மக்கள் தொண்டர்படை (CIVIL VOLUNTEER FORCE என்ற பெயரில் ஒருபாதுகாப்பு அமைப்பை உருவாக்க உத்தரவாதம் அளிக்கப்பட்டது. இதன்பிரகாரம் மூவாயிரம் பேரைக்கொண்ட மக்கள் தொண்டர் படை (C.V.F) உருவாக்கப்பட்டு வடக்கு கிழக்கு மாகாண சபையால் கடமையில் அமர்த்தப்பட்டார்கள். இந்த எண்ணிக்கை போதாதென்ற காரணத்தினால் இந்திய அமைதிகாக்கும் படையினர் இந்தியாவுக்குத் திரும்பும் சமயத்தில் வடக்கு கிழக்குமாகாணத்தின் பாதுகாப்பைப் பலப்படுத்துவதற்கு, பாதுகாப்பை உத்தரவாதப்படுத்துவதற்கு, மேலும் பலர் தேவை என்ற அடிப்படையில் மக்கள் தொண்டர் படையின் கீழ் மேற்கொண்டும் ஆட்களைத் திரட்டவேண்டி ஏற்பட்டது. அச்சமயத்தில் இங்கே ஒரு பாதுகாப்பு ஒருங்கிணைப்புச் சபை (SECURITY CO-ORDINATING COUNCIL) ஆரம்பிக்கப்பட்டது. இச்சபையில் காலஞ்சென்ற ரஞ்ஜன் விஜேரத்ன, வடக்கு கிழக்கு மாகாண முதலமைச்சர், பாதுகாப்பு அமைச்சின் செயலாளர், அமைதிப்படையின் பிரதம தளபதி கல்கட் போன்றவர்கள் அங்கம் வகித்தார்கள். அந்த பாதுகாப்பு ஒருங்கிணைப்புச் சபையானது பல கூட்டங்களை நடாத்தியது. அந்தவகையில் 21.10.1989 அன்று நடந்த பாதுகாப்பு ஒருங்கிணைப்புச் சபைக் கூட்டத்தில் மக்கள் தொண்டர் படை மூவாயிரம் பேர் போதாது என்றும், மேலும் நாலாயிரம்பேரைத் திரட்டவேண்டும் என்றும் நாம் கேட்டபொழுது "எம்மிடம் பணம் இல்லை, பயிற்சி கொடுப்பதற்குப் போதிய வசதியில்லை, அவர்களுக்குக் கொடுப்பதற்கான ஆயுதங்கள் இல்லை" என்று கௌரவ ரஞ்ஜன் விஜேரத்ன அவர்கள் பதில் சொன்னார். பயிற்சி வசதியையும் கடனாக ஆயுத உதவியையும் இந்தியாவிடம் கேட்போம் என்று அன்று நடந்த அதே கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

> உண்மையில் ஜனநாயக நீரோட்டத்துக்குவந்து வடக்கு-கிழக்கில் குறைந்தபட்சம் பாராளுமன்றத்தேர்தல், ஜனாதிபதித்தேர்தல் ஆகியவற்றை நடாத்தக் கூடிய ஒரு சூழ்நிலையை ஏற்படுத்திய ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியையும், வடக்கு கிழக்கு மாகாணசபையையும் அழித்தொழிப்பதே நோக்கமாக இருந்ததேதவிர இந்த நாட்டில் ஜனநாயகத்தை கொண்டுவர வேண்டும் என்பது நோக்கமாக இருக்கவில்லை.

அதன்பின்னர் தொடர்ச்சியாக நடந்த கூட்டங்களில் எடுத்த தீர்மானங்களின் பிரகாரமே துணைத் தொண்டர் படை (AUXILIARY CIVIL VOLUNTEER FORCE) என்றபெயரில் மேலதிகமாக நாலாயிரம்பேர் திரட்டப்பட்டு அவர்களுக்கும் பயிற்சியும் அளிக்கப்பட்டது. இவையாவும் பாதுகாப்பு ஒருங்கிணைப்புச் சபைக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவின் பிரகாரமே மேற்கொள்ளப்பட்டன. இந்தியஅரசாங்கத்திடமிருந்து பாதுகாப்புக்காகத் துப்பாக்கிகளும் பெறப்பட்டன. ஸ்ரீலங்கா அரசினால் அமைக்கப்பட்ட பாதுகாப்பு ஒருங்கிணைப்புச் சபைக்கூட்டத்திலேயே இந்த முடிவுகள் எடுக்கப்பட்டன. 1989ஆம் ஆண்டு பதினெட்டாம் திகதி இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையில் ஏற்பட்ட ஒப்பந்தத்தின் பிரகாரமே இந்த பாதுகாப்பு ஒருங்கிணைப்புச்சபை என்னும் அமைப்பு உருவாக்கப்பட்டதென்பதையும் இங்குநான் கவனத்திற்குக்கொண்டுவர விரும்புகின்றேன்.

இந்திய இராணுவம் வெளியேறத் தொடங்கிய காலகட்டத்தில், ஐ. ஜி. பி., கௌரவ ரஞ்சன் விஜயரத்ன, வடக்கு கிழக்கு மாகாண முதலமைச்சர் ஆகியோர் கலந்துகொண்ட கூட்டத்தில், அம்பாறை மாவட்டத்திலிருந்து இந்திய அமைதிகாக்கும்படை வெளியேறியதும் துணைத்தொண்டர் படையைச் சேர்ந்த 1400 உறுப்பினர்களை அங்கு அனுப்பவேண்டுமென முடிவு செய்யப்பட்டது. இம்முடிவின் பிரகாரம் அவர்கள் திருக்கோவில், தம்பிலுவில், கல்முனை போன்றஇடங்களுக்கு அனுப்பப்பட்டார்கள். எல்.ரி.ரி.ஈ போன்ற குழுக்களும், பல்வேறுபத்திரிகைகளும் அவர்களை T.N.A. என்றும் இன்னும் பல்வேறு பெயர்களிலும் அழைத்தார்கள். ஆனால் ஸ்ரீலங்கா அரசாங்கத்தை பொறுத்தவரையில் சட்டபூர்வமாக இவர்கள் துணைத் தொண்டர் படை (A.C.V.F.) என்று அழைக்கப்பட்டார்கள்.

> இன்று நடைபெறும் சண்டை தேவைதானா? இந்தச்சண்டை யாரால் உருவாக்கப்பட்டது? ஒருசிலரின் மடைத்தனமான எண்ணத்தால், எந்தவித முன்யோசனையும் அற்ற செய்கையால் இந்தயுத்தம் உருவாக்கப்பட்டுள்ளது. எத்தனைபேர் முடமாக்கப்பட்டுள்ளனர்? எத்தனைபேர் உயிரிழந்துள்ளனர்? மக்கள் எவ்வளவுதூரம் கஷ்டப்படுகிறார்கள்.

அன்றைய காலகட்டத்தில் அரசாங்கத்துக்கும் புலிகளுக்கும் இடையில் ஒரு யுத்தநிறுத்தமும், அன்னியோன்னியமான பேச்சுவார்த்தையும் நடந்துகொண்டிருந்தது. ஆகவே இந்தத்தொண்டர்படையினருக்கெதிராக அபாண்டமான குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டு அவர்களுக்கெதிராக நடவடிக்கைகள் முடுக்கிவிடப்பட்டன.

அமைதிப்படையினர் அம்பாறை மாவட்டத்திலிருந்து வெளியேறியதும் அங்கு தொண்டர்படையினர் அனுப்பப்பட்டதும் ஏறத்தாழ பத்து நாட்கள் அங்கு சுமுகமான நிலமை நிலவியது. பதினோராவது நாள் அதாவது நவம்பர் மாதம் நாலாம்திகதி தம்பிலுவில், திருக்கோவில் பகுதிகளில் தொண்டர் படை முகாம்கள் புலிகளால் தாக்கப்பட்டன. நவம்பர் ஐந்தாம்திகதி கௌரவ ரஞ்சன் விஜேரத்னவும், வடக்கு கிழக்கு மாகாண முதலமைச்சர் அவர்களும் திருக்கோவில், தம்பிலுவிலுக்குச் சென்றனர். சம்பந்தப்பட்ட எல்.ரி.ரி.ஈ.யினரை உடனடியாக கைதுசெய்யும்படி கௌரவ ரஞ்சன்விஜேரத்ன அவர்கள் இராணுவத்தினருக்கு கட்டளையிட்டார். ஆனால் எதுவும் நடக்கவில்லை.

இக்கட்டளை பிறப்பிக்கப்பட்ட அடுத்த நாள் பாகிஸ்தானில் நடந்த வெளிவிவகாரஅமைச்சர்கள் மாநாட்டில் கலந்து கொள்வதற்காக கௌரவ ரஞ்சன் விஜேரத்ன அவர்கள் சென்றதன் பின்பு எல்.ரி.ரி.ஈ யினர் கைதுசெய்யப்படவுமில்லை, வேறெந்த நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவுமில்லை. இதுபற்றி விசாரித்தபோது "எதுவும் செய்ய வேண்டாம்" என தமக்கு உத்தரவு வந்துள்ளதாக கூறப்பட்டது. அப்பொழுது பாதுகாப்புஅமைச்சராகஇருந்த கௌரவ ரஞ்சன் விஜேரத்ன அவர்கள் எல்.ரி.ரி.ஈ யினரை கைதுசெய்யுங்கள் என்று கூறுகிறார். ஆனால்அவர் வெளிநாடு சென்ற பின்னர் அவருக்கு மேலாகஇருந்த யாரோ "எதுவும் செய்யவேண்டாம்" என்று உத்தரவு போடுகின்றார். இந்த நிலைதான் அன்று இருந்தது. இன்று அரசசார்புப் பத்திரிகைகளும், வானொலியும், தொலைக்காட்சியும் மீண்டும் மீண்டும் என்ன கூறுகின்றன? முஸ்லீம்களைஅழித்தொழிப்பதற்கு ரீ. என். ஏ. ஏதோவெல்லாம் செய்ததாக கூறுகின்றன. ஆகவேதான் அவர்களை அழிப்பதற்காக எல்.ரீ. ரீ. ஈ. யினருக்கு ஆயுதம் வழங்கப்பட்டது என்று கூறப்படுகிறது. இந்த எல்.ரீ.ரீ. ஈ. இனரால் கொலை செய்யப்பட்ட முஸ்லீம் மக்களின் எண்ணிக்கை எவ்வளவென்று நான் கேட்கிறேன். கர்த்தான்குடியில் எத்தனை முஸ்லீம்கள் கொலைசெய்யப்பட்டார்கள்? ஏறாவூரில் எத்தனைபேர் கொலை செய்யப்பட்டார்கள்? வடக்கிலிருந்து எத்தனை ஆயிரம் முஸ்லீம்கள் துரத்தியடிக்கப்பட்டார்கள்? இவையாவும் யாரால் நடைபெற்றன? புலிகளால் நடைபெற்றன; இன்றும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. பொலநறுவையில் கொலைசெய்யப்பட்டார்கள். இன்னும் பல்வேறுபட்ட இடங்களில் கொலை செய்யப்பட்டிருக்கிறார்கள்.

உண்மையில் ஜனநாயக நீரோட்டத்துக்கு வந்து வடக்கு-கிழக்கில் குறைந்தபட்சம் பாராளுமன்றத்தேர்தல், ஜனா

www.padippakam.com



திபதித்தேர்தல் ஆகியவற்றை நடத்தக்கூடிய ஒருசூழ்நிலையை ஏற்படுத்திய ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியையும், வடக்கு-கிழக்கு மாகாண சபையையும் அழித்தொழிப்பதே நோக்கமாக இருந்ததே தவிர இந்த நாட்டில் ஜனநாயகத்தை கொண்டுவரவேண்டுமென்பது நோக்கமாகஇருக்கவில்லை

> அன்று எல்.ரீ. ரீ. ஈ. க்கும் ஸ்ரீலங்கா அரசாங்கத்துக்கும் பொது எதிரியாக இந்திய அமைதிகாக்கும் படையினர் இருந்தார்கள். ஆனால் இன்று என்ன சொல்லுகிறார்கள்? எல்.ரீ.ரீ.ஈ.க்கும் இலங்கைஅரசாங்கத்துக்கும் பொதுஎதிரியாக இருந்த ரீ.என்.ஏ.யை அழிப்பதற்காக ஆயுதம் கொடுத்ததாக கூறுகிறார்கள். அன்று இந்தியஅரசு பொதுஎதிரி. இன்று ரீ.என்.ஏ.பொதுஎதிரி இனிமேல் யார் பொதுஎதிரியாக வருவார்களோ தெரியவில்லை.

அதன்பின்னர் புலிகளுடன் இரண்டு வருடங்கள் பேசினார்கள். என்னகண்டார்கள்? என்னமுடிவுக்குவந்தார்கள்? புலிகளுடன்பேசியதால் ஏதாவதுஒருமுடிவுக்கு வரமுடிந்ததா? ஆயுதங்கள்கொடுத்தார்கள் ஏன்? ரீ.என்.ஏ. யை அடிப்பதற்காக ஆயுதங்கள் கொடுத்ததாககூறினார்கள் ரீ.என்.ஏ. என்று சொன்ன காலகட்டம் முடிந்தபின் புலிகளிடம் ஆயுதங்களை திரும்பவும் வேண்டினார்களா? எத்தனை ஆயிரம் ஆயுதங்கள் கொடுக்கப்பட்டன? என்ன காரணத்துக்காகக்கொடுக்கப்பட்டன? ஆயுதங்கள் மாத்திரமல்ல வடக்கு-கிழக்குமாகாணசபைக்கு சொந்தமான மூப்பதுவாகனங்கள் வடக்கு-கிழக்கு மாகாணசபை கவர்னரினால் புலிகளுக்கு கொடுக்கப்பட்டன. ஏன் கொடுத்தார்கள்? வடக்கு-கிழக்கு மாகாணசபைக்குச் சொந்தமான கொம்பியூட்டர்கள், நிலவிரிப்புகள் மற்றும் கதிரைமேசை உட்பட சகலவற்றையும் பொலிசாருக்குமுன்னால்,இராணுவத்தினருக்கு முன்னால் புலிகள் எடுத்துச்சென்றபோது ஏதாவது நடவடிக்கைஎடுக்கப்பட்டதா?

திரு.வரதராஜப்பெருமாள் மீதும், ஈழமக்கள் புரட்சிகர விடுதலைமுன்னணியின் மீதும், ரீ.என். ஏ. மீதும் நாகூசாமல் குற்றம் சாட்டுகிறார்கள். உண்மையில் புலிகளுக்கு ஆயுதம் கொடுத்தது ரீ.என்.ஏ.யை அடிப்பதற்கல்ல. இந்திய இராணுவத்தினர் நாட்டைவிட்டு போக மாட்டார்கள் என்று எண்ணி, இந்திய இராணுவத்திற்கு எதிராக சண்டையிடுவதற்குத்தான் ஆயுதங்கள் கொடுக்கப்பட்டன. இவற்றை என்னால் திட்டவட்டமாகக் கூறமுடியும்.

ஆனால் இவர்கள் எதிர்பார்க்காத வகையில் இந்திய இராணுவம் வெளியேறத் தொடங்கிவிட்டது. கொடுக்கப்பட்ட ஆயுதங்களை அவர்களால் திரும்பவும் பெறமுடியவில்லை. இவர்கள் இன்றுமறுக்கின்றார்கள் விமானஎதிர்ப்புத்துப்பாக்கிகள் கொடுக்கவில்லையென்று. விமானஎதிர்ப்புத்துப்பாக்கிகள் என்பது வெறுமனே விமானத்துக்கு சுடும் MISSILES போன்ற பொருட்கள் அல்ல, அவை கனரகத்துப்பாக்கிகள். அதாவது இரண்டுகிலோமீற்றருக்கு மேல் நிலத்திலும், ஆகாயத்திலும் சுடக்கூடிய கனரகத்துப்பாக்கிகள். இவ்வித துப்பாக்கிகள் பதினேழு கொடுக்கப்பட்டது என்பது உண்மை. இது விமானங்கள்,ஹெலிக்கொப்டர்கள் என்பவற்றுக்கெதிராகவும் பாவிக்கப்படலாம்; நிலத்திலும்பாவிக்கப்படலாம். இவை ஏன் கொடுக்கப்பட்டன? எந்த ஒரு காலகட்டத்திலும் ரீ.என்.ஏ. யிடம் விமானமோ, ஹெலிக்கொப்டரோ இருக்கவில்லை. தொண்டர்படையினரிடமும் இருக்கவில்லை. இந்தியசமாதானப்படைக்கெதிராக யுத்தம் புரிவதற்காகவே கொடுக்கப்பட்டன. ஆனால் இவர்கள் எதிர்பாராமல் இந்திய இராணுவம் வெளியேறியது. யுத்தம் புரிவதற்கு தேவை ஏற்படவில்லை ஆகவே அவற்றை தொண்டர்படைக்கு எதிராகப்பாவித்தார்கள். இன்று என்ன நடந்தது? இன்று அந்தஆயுதங்கள் யாருக்கு எதிராகப்பாவிக்கப்படுகின்றன.

இவ்வளவு கஷ்டங்களுக்கு மத்தியிலும் ஆயிரக்கணக்கான எமது தோழர்களை பலிகொடுத்தும் நாம் இந்தநாட்டில் ஜனநாயக நீரோட்டத்தில் சேர்ந்து ஜனநாயகப்பாதைக்கு வந்தோம். எம்மைத்தொடர்ந்து பலகட்சிகள் ஜனநாயகப்பாதைக்கு வந்தன.

அன்று எல்.ரீ.ரீ.ஈ.க்கும் ஸ்ரீலங்கா அரசாங்கத்துக்கும் பொதுஎதிரியாக இந்திய அமைதிகாக்கும் படையினர் இருந்தார்கள். ஆனால் இன்று என்ன சொல்லுகிறார்கள்? எல்.ரீ.ரீ.ஈ. க்கும் இலங்கை அரசாங்கத்துக்கும் பொது எதிரியாக இருந்த ரீ.என்.ஏ.யைஅழிப்பதற்காக ஆயுதம் கொடுத்ததாக கூறுகிறார்கள். அன்று இந்தியஅரசு பொது எதிரி ,இன்று ரீ.என். ஏ. பொதுஎதிரி இனிமேல் யார் பொதுஎதிரியாக வருவார்களோ தெரியவில்லை.

உண்மையில் அன்று எல்.ரீ.ரீ.ஈ. யானது இராணுவரீதியாக முதுகெலும்பு முறிக்கப்பட்டு காட்டுக்குள் விரட்டியடிக்கப்பட்டது. அரசியல்ரீதியாக மக்கள் முழுமையாக அவர்களைஎதிர்த்துநின்றனர். வடக்கு-கிழக்குமாகாணசபைதிறம்பட நடைபெற்றுவந்தது. மாகாணசபைக்கு அதிகாரங்களைக்கொடுக்கும்படி,நாங்கள் திருகோணமலையிலிருந்து முப்பது தடவைகளுக்குமேல் வந்து மீண்டும் மீண்டும் வற்புறுத்தினோம். ஆனால் என்ன நடைபெற்றது? புலிகளுடன்அரசு பேச்சுவார்த்தை நடைபெற்ற ஒரே காரணத்துக்காக மாகாணசபைக்கு அதிகாரங்கள் கொடுக்காமல் நிறுத்தப்பட்டது.

> ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியானது முதன்முதல் ஆயுதங்களைக் கையளித்து ஜனநாயகப்பாதைக்கு வந்தது. வடக்கு-கிழக்கு மாகாணங்களில் ஏனைய சகல குழுக்களும் மிகவும் பயந்துபோய் இருந்த காலகட்டத்தில் நாம் துணிந்து முன்வந்து மாகாணசபைத் தேர்தலில் கலந்துகொண்டோம்.

புலிகளுக்கு ஆயுதங்களை கொடுத்ததன் மூலம் இந்தயுத்தத்தை இன்னும் எவ்வளவு காலத்துக்கு நீடித்துக்கொண்டுசெல்ல வேண்டியிருக்கப் போகிறதென்பதை நாம் கவனிக்கவேண்டும். ஒருசிலரின்; சிலதனிநபர்களின் விருப்பத்தால் வடக்கு-கிழக்கு மாகாணசபை ஒழிக்கப்பட்டது. மாகாணசபை உறுப்பினர்கள் கொலைசெய்யப்பட்டார்கள். "இப்படிக்கொலைகள் நடைபெறுகின்றனவே! கொலைகாரர்களை பிடியுங்கள்" என்று நாங்கள் கேட்டோம். புலிகள் "நாங்கள்தான் கொலைசெய்தோம்" என்று கூறினார்கள். ஆனால் புலிகள் கொலை செய்யவில்லையென்று அரசதரப்பு கூறியது.

இன்று நடைபெறும் சண்டை தேவை தானா? இந்தச்சண்டை யாரால் உருவாக்கப்பட்டது? ஒருசிலரின் மடைத்தனமான எண்ணத்தால், எவ்வித முன்யோசனையுமற்ற செய்கையால் இந்த யுத்தம் உருவாக்கப்பட்டுள்ளது.எத்தனை பேர் முடமாக்கப்பட்டுள்ளனர்?எத்தனை பேர் உயிரிழந்துள்ளனர்? மக்கள் எவ்வளவு தூரம் கஷ்டப்படுகிறார்கள்.

வடக்குமாகாணத்தை எடுத்துப்பாருங்கள். அங்கே ஒருநாள் இரண்டுநாளல்ல மாதக்கணக்காக ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்படுகிறது.அத்தியாவசிய பொருட்கள் கூட அங்கே வாங்கமுடியாமல் உள்ளது. கர்ப்பிணிப்பெண்கள் ஆஸ்பத்திரிக்கு செல்லமுடியாது. இந்நிலை இந்த நாட்டிற்கு தேவையா? முடமாக்கப்பட்டிருந்த புலிகளுக்கு புத்துயிர் அளித்து மீண்டும் அந்த கொலைகாரக் கும்பலை உருவாக்கிவிட்டது யார்? உண்மையில் இவையெல்லாவற்றிற்கும் பதில் சொல்லியே ஆகவேண்டும். நாட்டில் பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கு பேச்சுவார்த்தைகள் இருக்கின்றன. பல்வேறுபட்ட வழிமுறைகள் இருக்கின்றன என்று கூறுகிறார்கள். ஆனால் பிரச்சனைகள் இங்கே என்ன மாதிரி அணுகப்படுகின்றன? இவை சரியான முறையில் சிந்திக்கப்பட்டு அணுகப்பட்டிருக்குமாயின் உண்மையில் இந்தப் பிரச்சனைகளை ஒழுங்கான முறையில் தீர்த்துக்கொண்டிருக்க முடியும்.

அரசாங்கம் தானாக உத்தரவுகொடுத்து துணைத்தொண்டர்படைஎன்றஅமைப்பை உருவாக்கி இந்தியஅரசின் உதவி கேட்டு அவர்களுக்கு பயிற்சியும் ஆயுதமும் கொடுத்தபின்னர் அவர்களைஅழிப்பதற்காக எல்.ரீ.ரீ.ஈ.யின் உதவிகளை நாடிய இச்செயல் இந்தநாட்டில் தான் நடந்திருக்கமுடியும்.

தமிழ்மக்களைப் பொறுத்தவரையில் இலங்கை சுதந்திரம் அடைந்ததில் இருந்து இன்றுவரை பெற்றுக்கொண்டதெல்லாம் கஷ்டங்கள், துன்பங்கள், அடிகள், உதைகள், கொலைகள் என்பனவே தவிர வேறெதுவுமேகிடையாது. அது ஒரு பாராளுமன்ற ஜனநாயகமுறையாக இருந்தாலென்ன, நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதி ஆட்சிமுறையாக இருந்தாலென்ன எமக்குக் கிடைத்தது எதுவுமேயில்லை. கடந்த இரண்டரை வருடங்களாக கௌரவ பிரேமதாசா அவர்கள் ஜனாதிபதியாக ஆனதிலிருந்து இன்றுவரை, அவர் சகலநிறைவேற்று அதிகாரங்களையும் கொண்டிருந்துங்கூட தமிழ்மக்களின் பிரச்சனைகளைத் தீர்க்க அவரால் முடியவில்லை. இரண்டு வருடங்களாக சர்வகட்சி மாநாடு நடந்தது. அந்தமாநாட்டின் மூலம் எதனையும் சாதிக்கமுடியவில்லை இயலாமையால் இதற்காக பாராளுமன்ற தெரிவுக்குழுவொன்றை அமைக்க முடிவுசெய்யப்பட்டது. மொத்தத்தில் பிரதம அமைச்சருக்கு அதிகாரங்களை வழங்கும் பாராளுமன்ற முறையாகஇருந்தாலும்சரி, நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதி ஆட்சிமுறையாக இருந்தாலும்சரி தமிழ்பேசும்மக்களின் பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கு இங்கே யாருக்காவது திராணியிருப்பதாக எனக்குத் தெரியவில்லை.

இன்றுவரை தமிழ்பேசும் மக்களுடைய பிரச்சனைக்கு தீர்வுகாணப்படவேண்டுமென்றோ, இதற்கு இதுதான் தீர்வு என்றோ யாராவது கூறுகின்றார்களா?

அடுத்த இரண்டு மூன்று வருடங்களுக்கான கொள்கைத்திட்டங்கள்குறித்துகௌரவ ஜனாதிபதி அவர்களால் இன்று இங்கு கூறப்பட்டது. ஆனால் வடக்கு-கிழக்கு மாகாண பிரச்சனைகளுக்கான தீர்வு எதுவும் இதில் முன்வைக்கப்பட்டதாக எனக்குத் தெரியவில்லை.

நாட்டின் பிரச்சனைக்கான தீர்வை முன்வைப்பதும் பிரச்சனையைத் தீர்ப்பதற்காக ஏனையோரைத்தம்முடன்இணைத்து அழைத்துச்செல்வதும் எந்த ஒருநாட்டின் அரசாங்கத்தினதும் கடமையாகும். ஆனால் இலங்கையைப் பொறுத்தமட்டில் மாத்திரம் அது முயற்கொம்பாகவே இருக்கின்றது.

இந்தஅரசாங்கம் திட்டமிட்டவகையில் தமதுகட்டுப்பாட்டிலுள்ள வானொலி, தொலைக்காட்சி ஊடாக பொய்ப் பிரச்சாரம் செய்துவருகிறதென்றே நான் உறுதியாக இந்தச்சபையில் கூற விரும்புகிறேன். புலிகளுக்கு ஆயுதம் கொடுத்தவிடயத்தில் "நாம் ரீ.என்.ஏ.யை அழிப்பதற்காகத்தான் ஆயுதம் கொடுத்தோம்"என்று கூறுகிறார்கள். 1989 ம்ஆண்டு உருவாக்கப்பட்ட பாதுகாப்பு ஒருங்கிணைப்புசபை நடாத்திய கூட்ட அறிக்கைகளை கௌரவ பாதுகாப்பு ராஜாங்கஅமைச்சர் அவர்கள் இச்சபைக்குமுன்னால் கொண்டுவருவாராயின், உண்மையில் என்நடந்தது யாரால் இவையெல்லாம் உருவாக்கப்பட்டது என்பதெல்லாம் தெரியவரும்.

★ ★ ★ ★ ★

★ ★ ★ ★ ★ ★ ★

★ ★ ★ ★ ★ ★

## சொல்லவும் வெட்கமடா

எல்லாம் தமிழ்மயம் எங்கும் தமிழ்மயம் என்று தொடங்கிய மாவீரர்கள்,நடவடிக்கை இயக்கத்துக்குள்ளே கோஷ்டி மோதலில் பிரதித்தலைவரை ஓரங்கட்ட பயன்படுத்தப்பட்டுள்ளதாம்.மாத்தையாஎன்பது சிங்களப்பெயர் என தமிழீழ தமிழ் ஆய்வுநிறுவனம் கடந்த பத்தாண்டுகளுக்கு மேலாக ஆராய்ச்சிசெய்து கண்டுபிடித்துள்ளதாம். இதனால் இப்போது பிரதித்தலைவரை பெயர்சொல்லி அழைக்க உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாம். இந்தப்பெயர் யாருடையது என தெரியாமல் மாவீரர்கள் முழிக்கிறார்களாம்.பிரதித்தலைவர் மெல்லமெல்ல மறக்க (மறைக்க) படுகிறார்.

வவுனியா செல்லவென ஓமந்தையில் புலிகளின் தடைசோதனைக்கென நிறுத்தப்பட்ட வரிசையில் ஒரு பதினொருவயது பால்குடிப் புலி தன்னைவிட உயரமான ஆயுதமொன்றைத் தூக்கியபடி வலம் வந்து கொண்டிருந்ததாம். அப்போது அங்கே வரிசையில் நின்றுகொண்டிருந்த இளைப்பாறிய பாடசாலை அதிபரிடம் அந்தப் பால்குடிப் புலி "எங்களைப்பற்றி என்ன நினைக்கிறீர்கள்" என்று கேட்டதாம். அதற்கு அதிபர் "உங்கள் வீரத்துக்குத் தலை வணங்குகிறேன். விவேகத்துக்கு தலை குனிகிறேன்" என்று சொன்னாராம். விவேகம் என்னால் என்னவென்று விளங்காத விவேகமற்ற பால்குடி சந்தோஷத்தில் ஐயாதான் எங்களைச் சரியாக புரிந்து வைத்திருக்கிறார் என்றவாறு அப்பால் சென்றதாம்.

அன்புதாசருக்கு ஆதரவு வழங்கவேண்டி மாவீரர்கள் ஈழவர் பெயரில் தலைநகர் வந்தனர். இவர்கள் ஈழவர் இல்லை சுயேட்சைகள் நாங்கள்தான் ஈழவர் என்றனர் தலைநகரில் லண்டன் தலைவர்குழு.ஆனால் இவர்கள் பிரதிநிதிகள் பாராளுமன்றத்தில் அவசரகால நீடிப்பு பிரேரணையில் அன்புதாசர் அரசுக்கு ஆதரவாக வாக்களித்துள்ளனர். ஆக மாவீரரும் அவர்கள் சார்பு ஈழவரும் லண்டன் தலைவர்குழு ஈழவரும் அன்புதாசர்விடயத்தில் ஒரே குட்டையில் ஊறிய மட்டைகள் தான்.

குடாநாட்டுக்குள் ஏதாவது வேலை செய்யவேண்டுமென்றால் மாவீரர்களின் நற்சாட்சிப் பத்திரம் வேண்டுமாம். வெளிநாடுகளில் உள்ளவர்கள் பெயர்களை சேகரித்து மாவீரர்கள்,அவர்கள் பெயர்பட்டியலில் நிவாரணப்பொருட்களை எடுத்துவிடுவார்களாம். மிஞ்சும் பொருட்களிலும் புலி ஆதரவாளர்கள் என்பவர்களுக்கே முன்னுரிமை, கூடியசலுகை. இதனால் அனைத்து மக்களும் கஞ்சி குடிக்கவேண்டி நாங்களே புலி நாங்களே புலி என்கிறார்களாம். இதனைக்கொண்டு மாவீரர்கள் எங்களுக்குதான் ஏகோபித்த ஆதரவு என்று மார்தட்டிக்கொள்கிறார்களாம்.

மக்கள் விடுதலைப்படையினரால் சொந்தமாகத் தயாரிக்கப்பட்ட செல் மோட்டர்களை கைப்பற்றி வைத்திருக்கும் மாவீரர்களுக்கு இன்னும் அவற்றை இயக்கத் தெரியவில்லையாம். செல் மோட்டர்களை இயக்குவது எப்படியெனக் கேட்டு மக்கள் விடுதலைப்படைவீரர்களை பிடித்து சித்திரவதை செய்தும் அவர்கள் சொல்லாததால் ஆத்திரம் அடைந்த மாவீரர்களால் மக்கள் விடுதலைப்படையினர் கொல்லப்பட்டார்களாம். நான்காவது வல்லரசை வென்றவர்கள் என புலுடாவிடும் மாவீரர்கள் இன்னும் மோட்டர் இயக்குவது போத்துக்கீசரைப் போல திரியில் தீமூட்டித்தானாம் என இடம்பெயர்ந்து வரும் யாழ்ப்பாணத்து மக்களால் பரவலாகப்பேசப்படுகிறது.

படிப்பகம்

www.padippakam.com



## அன்பார்ந்த தமிழ்பேசும் மக்களே !

அதிகார துஷ்பிரயோகம், பலாத்காரம், பணபேரம் போன்ற சகல ஜனநாயக விரோத வழிமுறைகளையும் பாவித்து ஸ்ரீலங்கா ஜனாதிபதி பிரேமதாசா தனது பதவியை தற்காலிகமாகக் காப்பாற்றியுள்ளார். தனக்கெதிரான ஜனநாயகரீதியிலான எதிர்ப்பை சட்டஒழுங்குகட்டு அமைய சந்திக்க மறுத்த ஸ்ரீலங்கா பிரேமதாசா கோழைத்தனமாக குறுக்குவழிகளின் மூலம் தப்பிப்பிழைத்துள்ளார். சபாநாயகர், சட்டமாஅதிபர், தேர்தல் ஆணையாளர் போன்றவர்களைத்தனது ஜனநாயக விரோதச் செயல்களுக்குப் பயன்படுத்தி தனது உயர் அதிகார எல்லைகளை தெளிவுபடுத்தியதுடன் தான் ஒரு சர்வாதிகாரி என்பதையும் இம்முறை தெட்டத் தெளிவாக்கியுள்ளார்.

> அத்துலத்முதலியையோ... காமினி திசநாயக்காவையோ...அன்றி அனுரா பண்டார நாயக்காவையோ நாம் தமிழ்பேசும் மக்களின் பிரச்சனைகளை தீர்க்கவந்த அவதார புருஷர்கள் என்று சொல்லவில்லை.

பிரேமதாசாவுக்கு எதிராக கிளம்பியிருக்கும் இந்த எதிர்ப்பலையிலிருந்து அவர் இன்று தப்பிப்பிழைத்திருந்தாலும் இந்த எதிர்ப்பலை இன்று பலதரப்பினராலும் உண்மைச்சொரூபங்களை வெளிக்கொணர்ந்திருக்கிறது. பிரேமதாசா என்ற சர்வாதிகாரி தான் ஜனாதிபதிப்பதவியை ஏற்ற நாளிலிருந்து இன்றுவரை தமிழ்பேசும் மக்களுக்குச் சாதகமான எந்தவிதமான நடவடிக்கைகளிலும் ஈடுபட்டதில்லை.

மாறாக தன்னுடைய இரும்புக்கரங்கள் மூலம் எம்மக்களைக் கொன்றழித்து அவர்களது அன்றாடவாழ்வை சீர்குலைத்து... எமது மக்களுக்குத் தேவையான அத்தியாவசியப் பொருட்களைக்கூட தடைசெய்து இந்த நூற்றாண்டின் மிகமோசமான மனிதகுல விரோத அடக்குமுறைக்கு எம்மக்களை உள்ளாக்கினார்.

தமிழ்பேசும் மக்களுக்கெதிரான மிக மோசமான இத்தகைய அனைத்து நடவடிக்கைகளிலும் பிரேமதாசா ஈடுபட்டிருந்தபோதும் தமிழ்பேசும் மக்களுக்கான ஒரு சிறு உரிமையைக் கூட பிரேமதாசா வழங்கத் தயாராக இல்லாதபோதும்.... இலங்கையில் வாழும் அனைத்து மக்களதும் ஜனநாயக உரிமைகளை பிரேமதாசா நசித்து வருகின்றபோதும் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியைத் தவிர்ந்த புலிகள் உட்பட அனைத்துத் தமிழ்கட்சிகளும் பிரேமதாசாவுக்கு ஆதரவளித்ததன் மூலம் தமது செயற்பாடுகள் மக்களுக்கானவை அல்ல. வெறுமனே தமது இருப்பையும், வசதிகளையும் உறுதிப்படுத்திக்கொள்ளவே என்பதை நிரூபித்திருக்கின்றன.

பிரேமதாசாவுக்கு எதிரான பிரேரணையின்போது கையெழுத்திட மறுத்தவர்களும் ... கையெழுத்திட்டுவிட்டு தவறுதலாக கையெழுத்து இட்டு விட்டோம் என்று குத்துக்கரணம் போட்டவர்களும்... வழமைபோல இது தமிழ் மக்களின் பிரச்சனை இல்லை என்று நாடகமாடியவர்களும்... அனைத்துக்கும் மேலாக இந்த சர்வாதிகாரிக்கு ஆதரவாக கொழும்பு நகரெங்கும் போஸ்டர் ஒட்டியவர்களும் ஒருபுறம்... பிரேமதாசாவுக்கு முண்டுகொடுக்க கொழும்புவிரைந்த ஈரோஸ் தோல் போர்த்திய புலிகள் இன்னொருபுறம் என்று ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி தவிர்ந்த இதரஅனைத்து தமிழ் கட்சிகளும் தமது சுயரூபத்தை வெளிப்படுத்தியிருக்கின்றன.

பிரேமதாசாவின் அதிகார துஷ்பிரயோகங்களுக்கு எதிராக பிரேரணையை பாராளுமன்றத்தில் கொண்டுவருவதற்கு அனுமதிகொடுக்கமறுத்து ஜனநாயகப்படுகொலையை பகிரங்கமாகவே செய்தார் சபாநாயகர் மொகமட். இவர் ஏற்கனவேயே வடமாகாணமும் கிழக்கு மாகாணமும் நிரந்தரமகவே ஒன்றிணையக் கூடாது என்று கோசம் எழுப்பிவருபவர்.தமிழ் மக்களுக்கும் முஸ்லீம் மக்களுக்கும் இடையிலான முரண்பாடுகளை தூண்டிவருவதில் முக்கியமானவர். நடுநிலை வகிக்க வேண்டியவர் இத்தனை பகிரங்கமாக ஜனநாயகப்படுகொலையை செய்த போதும்.... தமிழ்பேசும் மக்களின் உணர்வுகளுக்கெதிராகச் செயற்பட்ட போதும் சபாநாயகர் மொகமட்டுக்கெதிரான பிரேரணை பாராளுமன்றத்தில் கொண்டுவரப்பட்டபோது ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியைத்தவிர வேறு எந்தத் தமிழ் கட்சியுமே இந்தப் பிரேரணையை ஆதரவளிக்கவில்லை.

அதுமாத்திரமல்ல பாராளுமன்றத்தில் தனக்கெதிரான பிரேரணையினை விவாதிக்கவிடாமல் தள்ளிவைத்த ஜனநாயகத்துக்கு எதிரான நடைமுறையிலும் சரி... நாட்டுமக்களுக்கு எந்தவிடயத்தையும் தெரியவிடாமல் பத்திரிகையாளர்கள் வடக்கு-கிழக்குக்குப் போவதையோ அன்றி செய்திகள் வெளியிடுவதையோ கூடத்தடைசெய்து பல்லாயிரக்கணக்கான இராணுவத்தினரை வடக்கு-கிழக்கில் குண்டுகள்வீசி கொலைவெறியாட்டம் ஆடும் பிரேமதாசாவின் இராணுவசர்வாதிகாரத்துக்கும்சரி... வடபகுதியில் வாழும்(?) பல இலட்சக்கணக்கான அப்பாவித் தமிழ்பேசும் மக்களுக்கான உணவு, மருந்து,எரிபொருள் போன்ற அத்தியாவசியப் பொருட்களைக்கூட திட்டமிட்ட பொருளாதாரத்தடை மூலம் தடுத்து அவர்களை மரணத்துள் வாடவிட்ட பிரேமதாசாவின் மனிதகுல விரோத நடவடிக்கைகளும் சரி...கொழும்பிலும் கிழக்கு மாகாணத்திலும், மலையகத்திலும் பல்லாயிரக்கணக்கான அப்பாவித்தமிழ் இளைஞர்களை எக்காரணமுமின்றி கைதுசெய்து எவ்வித விசாரணைகளுமின்றி வதை முகாம்களில் வாட்டிவதைக்கும் பிரேமதாசாவின் கொடுங்கோல் தனத்துக்கும் சரி...முழு இலங்கை மக்களுக்கும் எதிரான மிக மோசமான அடக்குமுறை,அதிகார துஷ்பிரயோகம், பெரும்பணத்தை வாரிச் சுருட்டும் குடும்ப ஊழல்கள், ஆட்கடத்தல்கள்,படுகொலைகள்,கொலை மிரட்டல்கள்போன்ற பிரேமதாசாவின் அனைத்து ஒடுக்கு முறைகளுக்கும் சரி... அவசரகாலச்சட்டமே கவசமாக இருந்து அவரைப்பாதுகாக்கிறது. அவரதுஅதிகார எல்லைகளை அதிகரிக்கிறது. இந்தப் புதியசர்வாதிகாரியின் முறை கேடுகளை மூடிமறைக்க துணைபோகிறது.

> எம்மீது பிரேமதாசாவின் இரும்புக் கரங்கள் மிகமோசமாகப் பதியும் போதும் நாம் எமது இருப்பைமட்டும் கணக்கில் கொள்ளாமல் ஒரு சர்வாதிகாரிக்கெதிரான... ஜனநாயகத்திற்கான போராட்டத்தில் எந்த விதமான மிரட்டல்களுக்கும் அஞ்சாமல் எம்மை இணைத்துள்ளோம்.

ஆனால் இத்தகைய அடக்குமுறைச் சட்டமான அவசரகாலச்சட்டத்தை நீடிக்கும் பிரேரணையில்கூட அரசுக்குச் சாதகமாகவே ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி தவிர்ந்த ஈரோஸ் உட்பட்ட அனைத்து தமிழ் கட்சிகளும் ஆதரவளித்துள்ளன. இத்தகைய செயற்பாடுகளிலிருந்து இந்தக் கட்சிகள் மக்களின் நலனுக்கானவையா அன்றி தமது சுயநலனுக்காக இயங்குபவையா என்பதை அன்பார்ந்த தமிழ்பேசும் மக்களே நீங்களே தீர்மானிக்கலாம்.

விடுதலைப்புலிகளோ இத்தமிழ் கட்சிகளை விட மேலும் பலபடிமேலேபோய் விட்டார்கள். வெருகமீபத்திலும் கூட ஆனையிறவிலும்,மணலாற்றிலும்,முல்லைத்தீவிலும் பல ஆயிரக்கணக்கான தமது பேரராளிகள் கொலையுண்டு போன திற்கும் அங்கயீனர்கள் ஆனதற்கும் காரணமான பிரேமதாசாவை... எமது மக்களுக்கு இன்று இழைக்கப்படும் இத்தனை துன்பங்களுக்கும் காரணமான பிரேமதாசாவை விழவிடாமல்முண்டுகொடுப்பதற்காக 'கலைத்து' விட்டோம், 'கலைந்து' விட்டது, புலிகளுடன் 'சங்கமித்து' விட்டது என்றெல்லாம் உறுமித்திரிந்த ஈரோசுக்கு உயிர்கொடுத்து கொழும்புக்கு அனுப்பினார்கள். அதுமாத்திரமல்ல யாழ்ப்பாணத்தில் தங்கள் பிரச்சாரச்சாதனங்கள் அனைத்தையும் பயன்படுத்தி, பிரேமதாசாவுக்கெதிராக செயற்பட்ட காமினிதிசநாயக்க; அத்துலத்முதலி போன்றோருக்கெதிரான பிரச்சாரங்களைமேற்கொண்டு பிரேமதாசாவுக்கு வக்காளத்து வாங்கினர். இந்தவேளையிலும் எதிரியின் சமரசத்துக்கு போகத்தயாராக இருக்கும் புலிகளின் சந்தர்ப்பவாதத் தலைமையை இது மீண்டும் ஒருமுறை பகிரங்கமாக்குகிறது.

> பிரேமதாசாவிற்கெதிரான பிரேரணையின்போது கையெழுத்திட மறுத்தவர்களும், தவறுதலாக கையெழுத்து இட்டுவிட்டோமென்று குத்துக்கரணம் அடித்தவர்களும், இது தமிழ் மக்களின் பிரச்சனை இல்லை என்று நாடகமாடியவர்களும் இந்தச்சர்வாதிகாரிக்கு ஆதரவாக போஸ்டர் ஒட்டியவர்களும் ஒருபுறம்... பிரேமதாசாவுக்கு முண்டுகொடுக்க கொழும்பு விரைந்த ஈரோஸ்தோல் போர்த்திய புலிகள் இன்னொரு புறம் என்று எம்மைத்தவிர்ந்த இதர அனைத்து தமிழ்-முஸ்லீம்கட்சிகளும் தமது சுயரூபத்தைக் காட்டி யுள்ளன.

தங்கள் போராளிகள் கொல்லப் பட்டால் என்ன... தங்கள் மக்களுக்கு இன்னல் இழைக்கப்பட்டால் என்ன அவை குறித்து புலிகளின் தலைமை கவலை கொள்ளப் போவதில்லை. அவர்களுக்குத் தேவை அதிகாரமும் பதவியுமே. இதனைப்புலிகள் இன்னுமொருதடவை வெளிக்காட்டியுள்ளனர்.

### அன்பார்ந்த தமிழ்பேசும்மக்களே..

தமிழ்கட்சிகள் அனைத்தும் இத்தகைய தொரு சந்தர்ப்பவாத.... மக்கள் விரோத நிலையை எடுத்துள்ள இந்த நிலையில் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியினராகிய நாம் பிரேமதாசாவுக்கு எதிராக எடுத்துள்ள நிலைப்பாடு சாதாரணமானதல்ல.

பிரேமதாசாவின் ஆட்சிக்காலத்தில் அவரின் துணையுடன் புலிகளினால் எமது பாராளுமன்ற உறுப்பினர் சாம் தம்பிமுத்துவும் அவரது துணைவியாரும் பட்டப்பகலில் கொழும்பில் வைத்து சுட்டுக் கொல்லப்பட்டனர். அதற்குச் சிலகாலம் முன்பு அவரது மனைவியும் பிள்ளையும் கடத்தப்பட்டு சொத்துக்கள் சூறையாடப்பட்டன. பல்லாயிரக்கணக்கான அவர் சேர்த்துவைத்த புத்தகங்கள் புலிகளால் எரிக்கப்பட்டன.

கொழும்பிலே வைத்து மற்றுமொரு பாராளுமன்ற உறுப்பினரான தோழர் குகனேஸ்வரனின் உதவியாளர்கள் இராணுவத்தினரால் கைதுசெய்யப்பட்டு கடத்தப்பட்டனர். இதுவரை அவர்கள் குறித்த விபரம் தருவதற்கு பிரேமதாசாவின் அரசு மறுத்தே வருகிறது. எமது தற்போதைய செயலாளர் நாயகமும் பா.உ.மான தோழர் க.பிரேமச்சந்திரன் கொழும்பில் வைத்து அரச கைக்கூலிகளால் மிரட்டப்பட்டார். பாராளுமன்றத்தில்வைத்து ஸ்ரீலங்கா அமைச்சர்களினால் மிரட்டப் பட்டார் எமது மாகாணசபை உறுப்பினர்கள் அரச - புலிகள் கூட்டுக் கும்பலினால் கொல்லப்பட்டனர்.இன்றுவரை எண்ணற்ற எமது பலஉறுப்பினர்கள் அரசபடையினராலும், அரசினது புதியகைக்கூலிகளாலும் கைது செய்யப்பட்டு... கடத்தப்பட்டு... சித்திரவதை செய்யப்பட்டு வருகின்றனர். அரசசெய்தி ஸ்தாபனங்கள் மிகத்தீவிரமாகவே எமக்கெதிராக சேறடித்து வருகின்றன.

எமதுகட்சியின் மீது பிரேமதாசாவின் இரும்புக்கரங்கள் இவ்வளவு மோசமாக பதியும்போதும் நாம் எமது இருப்பை மட்டும் கணக்கில் கொள்ளாமல் ஒரு சர்வாதிகாரிக்கெதிரான ஜனநாயகத்துக்கெதிரான போராட்டத்தில் எந்தவிதமான மிரட்டல்களுக்கும் அஞ்சாமல் எம்மை இணைத்துக்கொண்டுள்ளோம்.

அன்பார்ந்த தமிழ்பேசும்மக்களே! அத்துலத்முதலியையோ, காமினிதிசநாயக்காவையோ நாம் தமிழ்பேசும் மக்களின் பிரச்சனைகளைத் தீர்க்கவந்த அவதார புருஷர்கள் என்று சொல்லவில்லை. மாறாக இன்று அவர்களது வாய்மொழிகளினூடாகவே தமிழ்பேசும் மக்களுக்கு காலம்காலமாக ஐக்கியதேசியக்கட்சி இழைத்துவந்த அநியாயங்கள் அக்கிரமங்கள் அரங்கிற்கு வந்து அம்பலமாகியிருக்கின்றன.

தமிழ்பேசும் மக்கள் மீது கொடிய அடக்கு முறை ஆட்சியை கட்டவிழ்த்து வந்த பிரேமதாசா என்ற சர்வாதிகாரியின் சமாதான முகமூடியைகிழிக்கவும்... உண்மைச் சொரூபத்தை உலகுக்கு காட்டவும்...பலம்வாய்ந்த இந்த பொது எதிரியை பலவீனப்படுத்தவும் .... பிரேமதாசாவின் ஜனநாயகவிரோதச்செயல்களை அம்பலப்படுத்தி அதன்மூலம் சர்வதேச அரசியல் அழுத்தங்கள் அவர்மீது பிரயோகிக்கப் படவும்...எம்மக்கள் அனுபவிக்கும் துன்பச் சுமைகள் குறைக்கப்படவும்...அனைத்தையும்விட எமது மக்களின் உரிமைப் போராட்டத்தின் முதல்படி வெல்லப் படவும் பிரேமதாசா என்ற சர்வாதிகாரியின் சர்வ அதிகாரங்களுக்கும் முடிவுகட்டும் இந்த ஜனநாயக ரீதியான போராட்டத்தில் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியினராகிய நாம் எந்தவித அச்சமோ அன்றித் தயக்கமோ இன்றி உறுதியாக எம்மை இணைத்துள்ளோம்.

> தங்கள் போராளிகள் கொல்லப் பட்டாலென்ன... தங்கள் மக்களுக்கு இன்னல் இழைக்கப் பட்டாலென்ன, அவைகுறித்து புலிகளின் தலைமை கவலை கொள்ளப்போவதில்லை. அவர்களுக்குத்தேவை அதிகாரமும் பதவியுமே.இதனைப்புலிகள் இன்னும் ஒருதடவை வெளிக்காட்டியுள்ளனர்.

இத்தகைய ஒரு முடிவை எடுத்து பிரேமதாசாவுக்கு எதிரான போராட்டங்களை இதர எதிர்கட்சிகளுடன் இணைந்து ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி முடுக்கிவிட்டபின்னர் கடந்த சிலவாரங்களாக வடக்கு கிழக்கில் பிரேமதாசாவின் அரசாங்கம் பல்லாயிரக்கணக்கான இராணுவத்தினரைக் குவித்து தாம் கொள்வனவு செய்த நவீன ரக விமானங்கள் மூலம் குண்டுகளை வீசி,எமது மக்களை தமது வதிவிடங்களைவிட்டுவிரட்டி இனப்பிரச்சனைக்கு தாம் காணவிரும்பும் இராணுவத்தீர்வையே என்பதை நிரூபித்துள்ளது.

★ ★ ★ ★ ★

# அன்பார்ந்த தமிழ் பேசும் மக்களே!

படிப்பகம்

# தோழர்களின் நினைவுகளில்...

இன ஒடுக்கு முறைகளையும் இராணுவ அட்டூழியங்களையும் எண்ணற்று அனுபவித்து வந்த கிழக்கிலிருந்து, ஈழ விடுதலைப் போராட்டத்துக்கு பெரும் பங்காற்றிய மக்கள் மனங்களில் மலையென உயர்ந்துநிற்கும் வீரமிகுதோழர்களுள் தோழர் குமார் குறிப்பிடத் தக்கவர்.

4.3.1987. தமிழ் பேசும் மக்களால் மறக்கப்படமுடியாத தினம். ஆம் அன்றுதான் எமது பாசமிகு தோழரும் மத்திய குழு உறுப்பினருமான தோழர் குமார், ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியில் இராணுவப்பிரிவான மக்கள் விடுதலைப்படையின் மட்டக்களப்பு பிராந்தியப் பொறுப்பாளர் தோழர் அருள், தோழர் நவீன், தோழர் கமலன் ஆகியோர் விசேடஅதிரடிப்படையினருக்கு எதிராகப் போரிட்டு வீரமரணம் அடைந்தனர்.

மட்டக்களப்பிலுள்ள மருதமுனைக் கிராமத்துக்கருகில் வீடொன்றில் கூட்டம் நடாத்திக் கொண்டிருந்த தோழர்களை விசேடஅதிரடிப்படையினர்தாக்கியபோது எதிர்தாக்குதல் நடாத்திப் போரிட்டதிலேயே எமது அன்புத் தோழர்கள் வீரமரணமடைந்தனர். அன்றைய சூழ்நிலையயில் போராட்டத்தில் தோழர்களின் இழப்புபேரிழப்பாகும்.

ஒரு சாதாரண விவசாயக் குடும்பத்தில் பிறந்த தோழர் குமாரின் முழுப் பெயர் சதாசிவம் அலியாஸ் குமார் என்பதாகும்.

1978,ல் மட்டக்களப்பில் ஏற்பட்ட சூறாவழிப்புயலினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஈழமாணவர் பொது மன்றம் (GUES) நிவாரண வேலைகளை மேற்கொண்டது. இந்நிவாரணவேலைகளில் ஈடுபட்டதன் மூலம் தன்னை ஈழமாணவர் பொதுமன்றத்துடன் இணைத்துக் கொண்டார் தோழர் குமார்.

எழுபத்தெட்டின் பிற்காலப்பகுதிகளில் மட்டக்களப்பில் ஈழமாணவர் பொது மன்றம் மேற்கொண்ட மக்கள் நலன் வேலைத்திட்டங்களில் முன்னணித் தோழராக தோழர் குமார் முன்நின்று உழைத்தார்.

அம்பாறை விவசாயக் கல்லூரியில் கல்விபயின்றகாலத்தில் காஞ்சிக்குடியாற்றுப் பகுதியிலிருந்து அகதிகளாக்கப்பட்ட மலையக மக்களை மீளக் குடியமர்த்துவதில் அயராது உழைத்து வெற்றிகண்டதோடு காஞ்சிக்குடியாற்றுப்பகுதி மலையகமக்கள் மனதில் நீங்கா இடம்பிடித்துக்கொண்டார்.

அம்பாறை பகுதிகளில் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி மக்கள் மத்தியில் அரசியல் வகுப்புகளை தொடர்ந்து நடாத்தி வரவேற்பை பெற்றது.
இந்த அரசியல்வகுப்புகள் சிறப்புற நடைபெறவும், மக்கள் இதனால் பயன் பெறவும் வேண்டி தோழர்குமார் அர்ப்பண உணர்வுடன் உழைத்தார். வறிய விவசாய, தொழிலாளர்களிடம் அரசியல்; சமூக; வர்க்க விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தும் வகையில் இவ்வகுப்புகள் நடாத்தப்பட்டன.

1983ம் ஆண்டு பங்குனிமாதம் நாடுதழுவிய ரீதியில் ஸ்ரீலங்காவின் எல்லாப் பாகங்களிலும் உழைக்கும் மக்களின் உன்னததந்தை தோழர்கார்ல்மாக்சின் நூற்றாண்டுவிழாகொண்டாடப்பட்டது

மட்டக்களப்பில் உள்ள சத்துருக்கொண்டான் கிராமத்தில் தோழர்கார்ல் மாக்சின் நூற்றாண்டுவிழா கூட்டமொன்றை, தோழர்குமார் ஏனைய ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தோழர்களுடன்இணைந்து ஏற்பாடு செய்திருந்தார். கூட்டம் சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருந்தபோது தோழர் குமார் ஏனைய பன்னிரண்டு தோழர்களுடன் இலங்கை இராணுவத்தினரால் கைதுசெய்யப்பட்டார்.

1983ம் ஆண்டு செப்டம்பர்மாதம் தமிழ் பேசும் மக்களின் போராட்டவரலாற்றில் பெருமைப்படக்கூடிய வீரமிகு மாதம். ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் இராணுவப்பிரிவான மக்கள்விடுதலைப்(PLA)படையினரால் திட்டம் தீட்டப்பட்டு மட்டக்களப்பு சிறையுடைப்பு வெற்றிகரமாக இம்மாதத்தில்தான் நடாத்தப்பட்டது.

மக்கள்விடுதலைப்படையினரின் இத்திட்டத்தை சிறைக்குள் மேற்கொள்ள ஏனைய எமது தோழர்களுடன் தோழர் குமார் முன்னின்று உழைத்தார். சிறைக்குள் இருந்த இதர இயக்க போராளிகளின் ஒத்துழைப்புடனும், மக்கள்விடுதலை படை மேற்கொண்ட இச்சிறையுடைப்பில் தோழர்குமார் ஏனைய ஐம்பத்திரண்டு சிறைக்கைதிகளுடன் வெற்றிகரமாக வெளியேறினார். இத்திட்டம் சிறப்புற இடம்பெற்று வரலாற்று முக்கியத்துவமாகியதில் தோழர்குமாரின் பங்கு மகத்தானது.

மக்கள்விடுதலைப்படையின் இராணுவப் பயிற்சியை பூரணப்படுத்திக்கொண்ட தோழர்குமார், மக்கள் விடுதலைப் படையில் இணைந்து இராணுவப்பயிற்சி எடுத்துவந்த தோழர்களுக்கு அரசியல் வகுப்புக்களை மேற்கொள்ளும் பொறுப்பாளராக நியமிக்கப்பட்டார்.
ஆயுதங்கள் மட்டுமே கதியென இயக்கங்கள் சென்றுகொண்டிருந்த வேளையில் விமர்சனம்; சுயவிமர்சனம்; ஜனநாயக மத்தியஸ்தம் என்ற கோட்பாட்டின் அடிப்படையில் அரசியல், இராணுவ ரீதியாக தன்னை வளர்த்துவந்த ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி அரசியல், இராணுவரீதியில் தம்மை செழுமைப்படுத்தி தமிழ்பேசும் மக்களின் விடுதலைப்போராட்டத்தில் தகமையுள்ள தலைமையாக்கவேண்டி, 1984ல் தனது முதலாவது காங்கிரசை நடாத்தியது.


விடுதலைஇயக்கங்களுள், காங்கிரசை நடாத்தி விடுதலைப்பாதையில் முன்னேற வேண்டி தன்னை செழுமைப்படுத்திக்கொண்ட பெருமை ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணிக்கே உண்டு. 1984 யூன் மாதம் நடாத்தப்பட்ட இப்பெருமைமிகு முதலாவது காங்கிரசில் தோழர்குமார் மத்தியகுழு உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டார்.

1984இன் கடைசிப்பகுதியில், கிழக்கு மாகாணத்தில் கட்சி வேலைகளை துரிதமாக்கும் பொருட்டு தோழர்குமார் மட்டக்களப்புக்கு திரும்பினார். இக்காலகட்டத்தில் பலநூறு இளைஞர்களை ஈழமக்கள்புரட்சிகர விடுதலை முன்னணியில் இணைப்பதில் பெருவெற்றி கண்டார். கூலிவிவசாயிகள், தொழிலாளர்களை சுரண்டும் நிலவுடமையாளர்கள், முதலாளிகளுக்கெதிராக, தமது உரிமைகளை வென்றெடுக்க போராட வேண்டி அமைப்பாக இணைப்பதில் பெரிதும் பாடுபட்டார்.

மண்டூர் ஓட்டுத்தொழிற்சாலையில் பெண்களுக்கு குறைந்தநேர வேலையும் சமசம்பளமும் வழங்கப்படவேண்டுமென தோழர்குமார் முன்னின்று ஏனைய தொழிலாளர்களின் ஒற்றுமையுடன் நடாத்திய வேலைநிறுத்தம் பெருவெற்றி கண்டது. இப் பெருவெற்றியின் மூலம் தொழிலாளர்களால் தோழர் குமார் பெரிதும் மதிக்கப்பட்டார்.

கிழக்குமாகாணத்தில் மக்கள் விடுதலைப்படை ஒரு அரசியல்மயப்படுத்தப்பட்ட இராணுவப்பிரிவாக விளங்குவதற்கு பெரிதும்பாடுபட்டு வெற்றி கண்ட தோழர்குமார், ஏனையதோழர்களுக்கு உத்வேகமளிக்கக்கூடிய வழிகாட்டியாக என்றும் திகழ்வார். அயராதஉழைப்பும், நேர்மையும், திறமையும் ஒருதலைவருக்கு நடைமுறையில் எப்படியிருக்கவேண்டுமென்பதற்குதோழர் குமார் ஒரு உதாரண புருஷராகிறார்.

[redacted]




## நவம்பர் 19
## தோழர்.க.பத்மநாபாவின் நாற்பதாவது பிறந்ததினம்



அன்புத்தோழனே!!
மக்களுக்காக வாழ்ந்து
மக்களுக்காக மரணித்த
மாபெரும் தலைவன் நீ !!

"நாம் மக்களில்லாத
மண்ணை நேசிக்கவில்லை
மக்களுக்காகவே
மண்ணைநேசிக்கிறோம்"
என்றஉனது உண்மைமிகு உன்னத
வாசகங்களை மக்கள் உணரத்
தொடங்கியுள்ளனர்.
உனது உயரிய சிந்தனைகள்
வழியே பாசிசத்தை எதிர்த்து
மக்கள் விடுதலையை வெல்லுவர்

மக்களே தேசம்!!
மக்களே வெல்லுவர்!!!

www.padippakam.com



பல்கலைக்கழக ஆசிரியர்கள் மனித உரிமைகள் (யாழ்ப்பாணம்) அறிக்கை

# 4 அரசியல் அழிவுகளும் மனித சோகங்களும்

தென்னிலங்கையை எடுத்துக் கொண்டால் சமஷ்டி என்ற பதத்தை பரந்த கண்ணோட்டத்துடன் அணுகக்கூடிய சாத்தியம் இன்னும் உருவாகவில்லையா என்றும் மக்களை அரசியல் ரீதியாக சமஷ்டிக்கு ஆதரவானநிலைக்கு திரட்ட முடியாமற் போயிற்றா என்ற கேள்விகள் எழுகின்றன.

புலிகள் மீண்டும் பேச்சுவார்த்தைக்கு முன் வந்தாலும் கூட தமது அரசியல் நலனை முன்னிட்டு தீர்வுகள் தற்காலிகமானவையே என்றும் ஈழத்துக்குக் குறைவானதாகத் தமது இலட்சியம் இருக்கப் போவதில்லை என்றும் மீண்டும் கூற வேண்டியிருக்கும்.

மேலும் கடந்தகாலங்களில் தமிழர்கள் தொடர்பான சிங்களமக்களின் அச்சம் கற்பனையானதாக இருந்தபோதிலும் இம்முறை அது உண்மையானதாகவே இருக்கும். புலிகளுக்கு எதைக் கொடுத்தாலும் அவர்கள் ஈழக் கோரிக்கையை விடப்போவதில்லை என்ற அச்சம் அவர்களிடம் தொடர்ந்து இருந்து வரும்

தமிழ் மக்களுக்கு சமஷ்டி அந்தஸ்து வழங்கப்படுவதோடு அவர்களது பாதுகாப்பு மற்றும் அபிவிருத்தி உறுதிப்படுத்தப்படுவதும் அவசியம். ஆனால் இன்றைய அரசியல் நடைமுறை தகர்க்கப் படாவிட்டால் இதற்குத் தீர்வு காணப்படமுடியாது.

> மக்களுக்காக யுத்தம் புரிவதை இரு சாராரும் கைவிட்டு நீண்ட காலமாகி விட்டது.இது அவர்களது உயிருக்கான போராட்டமாகிவிட்டிருக்கிறது.

யூன் மாதம் யுத்தம் ஆரம்பமாவதற்கு முன்பாக விடுதலைப்புலிகள் கிழக்கில் நூற்றுக்கணக்கான சரணடைந்தமுஸ்லீம் மற்றும் சிங்கள பொலிசாரைப் படுகொலை செய்தனர். தம்முடன் மக்கள் இறுதி யுத்தத்தில் ஈடுபடவேண்டும் எனவும் அழைப்புவிடுத்தனர். யூன் 11 ஆம் திகதி கல்முனையில் பொருட்களைக் கொள்வனவு செய்யவந்த 1படை வீரர்களைக் கொலைசெய்து சடலங்களை வீசி எறிந்தனர்.இவ்வாறான காரியங்களை நடத்தி முடித்த புலிகள் நான்கு நாட்களின்பின் பின்வாங்கிச் சென்றனர்.பின்வாங்கிச்சென்றபோது அவர்கள் தாம் யாரைப் பாதுகாக்கப் போவதாகச் சொன்னார்களோ அம் மக்கள் புலிகள் பயணம் செய்த வாகனங்களின் பின்னால் கால்நடையாகச் செல்லவேண்டியிருந்தது.

துணிவு மிக்க இலங்கைப்படையினர் பற்றிப்பார்ப்போமானால் அவர்கள் ஆயுதம் ஏந்தியிராத ஆயிரக்கணக்கான தமிழ்மக்களை மோட்சத்திற்கு அனுப்பியது தெரிகிறது. கிழக்கின் நூற்றுக்கணக்கான முஸ்லீம் பொலிஸார் கொல்லப்பட்டதையடுத்து முஸ்லீம் மக்கள் கோபவெறிகொண்டு அட்டூழியத்தில் இறங்கினர். இதையடுத்து தமிழ் மக்களிடையே தமது மதிப்பை நிலைநிறுத்தும் பொருட்டு விடுதலைப் புலிகள் முஸ்லீம்கள் மீது பதில் தாக்குதல் தொடுத்தனர். ஆனால் இப்போது மக்கள் புலிகளை அநேகமாகப் பொருட்படுத்துவதில்லை.

> ஜார் மன்னர்களும் வங்குரோத்தான ஐரோப்பியஆட்சியாளர்களும் மட்டுமின்றி ஹிட்லரும்கூட கடைப்பிடித்த யூத எதிர்ப்பு இயக்கத்தை,வடபகுதி முஸ்லீம்களுக்குநடந்தகதி நினைவூட்டுவதாக இருந்தது.

1983ம் ஆண்டு அரசாங்கம் தமிழர்கள் பேரில் ஒட்டுமொத்தமாக பதில் தாக்குதல் நடத்தியதாலேயே தமிழ்த் தீவிரவாதிகள் தமது போராட்ட உரிமையை அடையமுடிந்தது.

யூலை 12ம் திகதியளவில் முஸ்லீகள் பயணம் செய்துகொண்டிருந்த வாகனங்கள் கல்முனைக்கும் காத்தான்குடிக்கும் இடையில் புலிகளால் நிறுத்தப்பட்டன. தமிழ் மற்றும் முஸ்லீம் வட்டாரங்கள் அளித்த தகவல்களின் பிரகாரம் அம் முஸ்லீம் பயணிகள் முழந்தாழிட்டு புலிகளிடம் தம்மை விட்டுவிடும்படி மன்றாடினராம். இச்சம்பவத்தில் நூற்றுக்குமதிகமானோர் சிறைப்பிடிக்கப்பட்டனர். சிலசடலங்கள் புலிகளுக்கு ஆதரவு அளிக்காத கிராமம் எனச்சொல்லப்படும் குருக்கள் மடத்தில் வீசியெறியப்பட்டிருந்தன. இதைத்தொடர்ந்து ஆகஸ்ட் 3ஆம் திகதி மற்றும் 12ஆம் திகதிகளில் காத்தான்குடியிலும் ஏறாவூரிலும் முஸ்லீம்கள் படுகொலை செய்யப்பட்டனர். அரசாங்கத்துக்கும் புலிகளுக்கும் இடையிலான இம்மோதலுக்குமத்தியில் கிழக்கில் இந்த அழிவுச்சக்தியான மக்கள்விரோத அரசியல் நுழைந்தது. ஏற்கனவே துன்பத்திலும் சுமையிலும் உழன்றுகொண்டிருந்த மக்கள் தமது சகோதரர்கள் அல்லது அயலவர்களுக்கு துன்பத்தை ஏற்படுத்தி குரூர திருப்தி அடையும் ஒரு சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டனர். இம்மக்கள் செயற்கைரீதியாக எதிரிகளாக்கப்பட்டனர்.

புலிகளும் சரியான அரசியல் அடிப்படையற்ற நிலையில் முஸ்லீம்களுக்கு எதிரான தமது போக்கைக் கைக்கொள்ள ஆரம்பித்தனர்.

அக்டோபர் மாதமளவில் முன்னணி புலிகள் இயக்கஉறுப்பினர் ஒருவர் வாகரைக்குச் சென்றார். அப்பிரதேசத்தில் புலிகளின் செல்வாக்கு வலுவிழந்திருந்தது.ஆனாலும்கூட கிழக்கில் முஸ்லீம்கள் மீது மீண்டும் புதிய தாக்குதல்கள் ஆரம்பிக்கப்படலாம் எனப் பலர் அச்சமுற்றனர்.ஆனால் அக்டோபர் இறுதியில் வடக்கிலிருந்து முஸ்லீம் மக்கள் வெளியேற்றப்படுவது அதிகரிக்க அரம்பித்தது.

இச்செய்கை பல தமிழ் மக்களை குழப்பத்தில் ஆழ்த்தியதோடு ஆத்திரம் கொள்ளவும் செய்தது ஆனால் இவ் வெட்கக்கேடான நடவடிக்கை கிழக்கில் வரவேற்பைப்பெற்றது.பதின்மூன்று படை வீரர்கள் யாழ்ப்பாணத்தில் கொலை செய்யப்பட்டதை அடுத்து கொழும்பிலும் ஏனைய இடங்களிலும் தமிழர்கள் அரசாங்கத்தால் பழிவாங்கப்பட்டதைப்போன்ற சம்பவங்கள் முன்னர் நடைபெற்றிருந்தால் பல தமிழ் மக்கள் இந்நடவடிக்கை, பின்விளைவுகளை ஏற்படுத்துமோ என அச்சமடைந்தனர். ஜார் மன்னர்களும் வங்குரோத்தான ஐரோப்பிய ஆட்சியாளர்களும் மட்டுமின்றி ஹிட்லரும் கூட கடைப்பிடித்த யூத எதிர்ப்பு இயக்கத்தை, வடபகுதி முஸ்லீம்களுக்கு நடந்தகதி நினைவூட்டுவதாக இருந்தது.

நீதியமைச்சர் ஏ.சி.எஸ்.ஹமீது யூன் 16ம் திகதி காலை யாழ்ப்பாணம் சென்றார். முதல் நாள் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளின் போது உருவாக்கப்பட்ட யுத்தநிறுத்த உடன்படிக்கையை நடைமுறைக்குக் கொண்டுவருவது பற்றிய நம்பிக்கையுடன் அவர் அப் பயணத்தை மேற்கொண்டிருந்தார். இதே சமயம் காலை ஆறு முப்பது மணியளவில் யாழ் கோட்டை மீது ஏதோ காரணத்தின் பேரில் புலிகள் துப்பாக்கிப் பிரயோகம் நடத்தியிருந்தனர். ஏற்கனவே பல தாக்குதல்களுக்கு ஆளாகியிருந்த யாழ் ஆஸ்பத்திரியின் நிலைமையும் நிச்சயமற்றதாக இருந்தது. யூன் பத்தொன்பதாம் திகதி புலிகள் ஆஸ்பத்திரியில் இருந்த தமது போராளிகள் அனைவரையும் அப்புறப்படுத்தினர். மேலும் பல காயமடைந்த போராளிகள் ஆஸ்பத்திரிக்கு கொண்டுவரப்பட இருப்பதாகக் கூறினர். இருபதாம் திகதி பன்னிரண்டு முப்பது மணியளவில் யாழ் கோட்டை மீது மேலும் ஒரு தடவை துப்பாக்கிப்பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது. இதையடுத்து ஆஸ்பத்திரி ஊழியர்களும் நோயாளர்களும் ஆஸ்பத்திரியை விட்டு வெளியேறினர். பின்னர் ஆஸ்பத்திரியை மூடிவிடுவது என அதிகாரிகள் தீர்மானித்தனர். இதையடுத்து இருபத்தோராம் திகதி விடுதலைப் புலிகளின் பிரதம பிரச்சார அதிகாரியான யோகி ஆஸ்பத்திரி மூடப்பட்டமைக்காக டாக்டர்களைக் கண்டித்தார்.

> இந்த யுத்தத்தில் சிவிலியன்கள் கொல்லப்படவேண்டும் என்று இருசாராரும் கருதும் நிலைக்கு யுத்தம் செல்லவாரம்பித்தது. ஒரு சாராருக்கு ஆத்திரம். மறுசாராரோ குடிமக்களின் சடலங்களை பிரச்சார உத்தியாகக்கருதினர்.

## ஆகாயத்தாக்குதல்

இலங்கைப் படையினர் இதையடுத்து ஆகாயத்தாக்குதல்களை ஆரம்பித்தனர் பெரும்பாலான ஆகாய மார்க்கக் குண்டுத்தாக்குதல்கள் இராணுவ ரீதியானதாக இருக்கவில்லை.ஆனால் இத் தாக்குதல்கள் குறிப்பிட்ட இலக்குகள் மீது நடத்தப்பட்டதாகவே உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டது.சனத்தொகை மிக்க இடங்களில் மிகக் கவனமாகவே தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டதாக ஒரு இராணுவ ஜெனரல் தெரிவிக்கவும் செய்தார். ஆனால் நடைமுறையில் தரையிலிருந்து கிளம்பும் எந்த சிறு ஆயுதப் பிரயோக சம்பவங்களின் பேரிலும் இளைஞர் நடமாட்டம் அல்லது குழுக்களின் மீதும் புலிகள் உபயோகித்து வந்த வகை வாகனங்கள் பேரிலும் குண்டுத் தாக்குதல்கள் நடத்தப்பட்டன. இந்த இலக்குகள் அருகாமையில் ஆஸ்பத்திரி, குடியிருப்புகள், அகதிமுகாம்கள் அமைந்திருக்குமானாலும் அவை கவனத்தில் கொள்ளப்படவில்லை,ஒரு சிவிலியன் விடுதலைப் புலிக்கு அடைக்கலம் அளித்திருந்தால் அவர் தண்டனைக்கு ஆளாகவேண்டியிருக்கும் என்பது பல அதிகாரிகளின் தனிப்பட்ட கருத்தாக இருந்தது. இந்த யுத்தத்தில் சிவிலியன்கள் கொல்லப்பட வேண்டும் என்று இருசாராரும் கருதும் நிலைக்கு யுத்தம் செல்லவாரம்பித்தது. ஒரு சாராருக்கு ஆத்திரம்.மறுசாராரோ குடிமக்களின் சடலங்களை பிரச்சார உத்தியாகக் கருதினர்.

விடுதலை வீரர்கள் குடிமக்களின் வீடுகளை தமது முகாம்களாக உபயோகிக்க ஆரம்பித்தபோது அவை தாக்குதல் இலக்குகளாயின. விடுதலை வீரர்கள் தரையில் இருந்தும் ஓடும் வாகனங்களிலிருந்தும் அகதிமுகாம்களின் அண்மையில் இருந்தும் விமானங்களை தாக்கினர். யாழ் கோவில் வீதியில் அமைந்திருந்த செஞ்சிலுவைச் சங்க கட்டிடத்துக்கு அருகாமையில் இருந்தும் தாக்குதல் நடத்தப்பட்டது. யாழ்ப்பாணத்தின் மீது மலமும் ஆகாயமார்க்கமாக வீசப்பட்டது. பீப்பாய் குண்டுகளுக்குப் பதிலாக புதிய வகைக் குண்டுகள் பயன்படுத்தப்பட்டன. இதே சமயம் விடுதலைப் புலிகள் யூரியாவை வெடிமருந்து தயார் செய்ய பயன்படுத்துகிறார்கள் என்ற காரணத்தின் பேரில் யூரியாவுக்கு தடை விதிக்கப்பட்டது. ஆனால் சில வகை பீப்பாய்க் குண்டுகளில் யூறியாவும் உப்பும் கலந்திருந்தன.

(தொடரும்)

ஈழமக்கள் செய்தித் தொடர்பு நிலையம்.

EELAM PEOPLES INFORMATION CENTRE

POST BAG - 5551
MADRAS - 600094
INDIA.

B.M. BOX - 1738
LONDON-WCIN-3XX
U. K.

POST FACH - 100206
4600 DORTMUND - 1
GERMANY.

P. BOX 6800
AGINCOURT
ONTARIO M1S3C6
CANADA.

BOITE NO - 69
7 - RUE RACINE
95140 - GARGES
FRANCE.

POST BOKS - 115
GROURD HAGENEN
0905 - OSLO - 9
NORWAY.

POST BOX - 52
LAVERTON
VICTORIA - 3028
AUSTRALIA.

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் பிரச்சாரச் செய்திப்பிரிவான ஈழ மக்கள் செய்தித்தொடர்பு நிலையத்தின் ஐரோப்பிய பிரிவினால் • புதியபார்வை • வெளியிடப்படுகிறது.

படிப்பகம்